தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 457

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

இருபத்தாறாவது தொகுப்பு

(இலக்கியப் பகுதி)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2003 விலை ரூ. 90

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 457

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

இருபத்தாறாவது தொகுப்பு

(இலக்கியப் பகுதி)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

புலவர் வீ. சொக்கலிங்கம்

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2003 விலை ரூ. 80

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

... ★ ...

நூற் பெயர்	:	தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் - தொகுதி 26
பதிப்பாசிரியர்	:	புலவர் வீ. சொக்கலிங்கம்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீடு எண்	:	457
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	அக்டோபர் 2003
தாள்	:	11.2 கி.கி. தமிழ்நாடு
நூல் அளவு	:	34×48 செ.மீ.
பக்கங்கள்	:	316
படிகள்	:	250
எழுத்து	:	10 புள்ளி
அச்சிட்டோர்	:	**ஸ்ரீ வேலன் பிரஸ்,** 132, S,P. கோயில் தெரு, சிதம்பரம். ☎ 220118
புத்தகக் கட்டு	:	அட்டைக் கட்டு
பொருள்	:	இலக்கியச் சுவடிகளின் விளக்க அட்டவணை
விலை	:	**80—00**

வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தில் சேகரிக்கப் பெற்று பாதுகாக்கப் பெற்றுவருகின்ற அரிய சுவடிகளை அட்டவணையிட்டு தொகுத்து வெளியிடும் பணி முக்கியமான ஒன்றாகும். இதுவரை 25 தொகுதிகள் வெளிவந்துள்ளன. தற்போது 26 - ஆவது தொகுதி இலக்கியத் தொகுதியாக வெளிவருகிறது.

தமிழ்ப் பகுதியிலுள்ள சுவடிகள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கியச் சுவடிகளாகவும், பல மருத்துவச் சுவடிகளாகவும் உள்ளன. இலக்கியச் சுவடிகள் 3612 முதல் 3982 வரையிலான எண்களைக் கொண்டமைக்கு விவர அட்டவணையாக இந்நூல் வெளிவருகின்றது. எஞ்சியுள்ள சுவடிகளின் விவர அட்டவணை தொடர்ந்து வெளிவர உள்ளன.

இந்த 26 ஆவது தொகுதியினை தக்க விளக்கங்களுடனும். குறிப்புகளுடனும் விவர அட்டவணை தயாரித்தளித்த இந்நூலக முன்னாள் தமிழ் பண்டிதர் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்கட்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவரப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும் நன்முறையில் அச்சிட்டுத் தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் விரைவில் வெளிவர ஆவனச் செய்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நூலக நிர்வாக அலுவலர் திரு. சொ. இராமக்கிருஷ்ணன் அவர்

களுக்கும் நூலகர் திருமதி க. இராமதிலகம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்வலர்கள் அனைவரும் படித்து பயனடைவதோடு தங்களிடம் அல்லது நண்பர்களிடம் உள்ள சுவடிகளையும் இந்நூலகத்தில் சேர்த்துப் பெரும்பயனடைய கேட்டுக் கொள்கிறேன். இத்தொகுதி சுவடியியல் ஆய்வாளர்களுக்கும் நன்கு பயன்படும் என நம்புகிறேன்.

சி. கோசலராமன், இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்
12–10–2003

முன்னுரை

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்பது வள்ளுவம்.

நுண்மாண் நுழைபுலம் மிக்க நூலறிபுலவர்கள் உலகத்தார் இன்புற்று வாழவேண்டிப் பல அரிய கருத்துக்களை நூலாக்கிப் பனை ஓலைகளில் எழுதிப் பாதுகாத்து வந்தனர் அவ்வாறான சுவடிகள் பல நம் சரசுவதி மகாலிலும் இடம் பெற்றுள்ளன. அவைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகளின் விளக்கங்களை மக்கள் அறிய வேண்டி அவற்றின் விவர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வெளிவருகின்றன.

இலக்கியம், மருத்துவம் என இரு பிரிவுகளைக் கொண்ட தமிழ்ச் சுவடிகளின் விவர அட்டவணைகள் 3,4,5,6,8,9,11,12,13,14,15,17, 18,19,20,21,22 ஆகிய தொகுதிகளாக மருத்துவத்துக்கும் ,1,2,7,10,16, 23,24,25 ஆகிய தொகுதிகளாக இலக்கியத்துக்குமாக வெளிவந்துள்ளன.

தொடர்ந்து, சுவடி எண் 1960 முதல் 2110 வரையிலான சுவடிகளின் விவர அட்டவணைகள் 26-வது தொகுதியாக வெளிவருகின்றது.

இத்தொகுதியினை வெளியிட அனுமதியளித்த தஞ்சை, சரசுவதி மகால் நூலக இயக்குநரும். மாவட்ட ஆட்சியருமான உயர்திருவாளர். சி. கோசலராமன் இ.ஆ.ப. அவர்கட்கும், நூலக நிருவாக அலுவலர் உயர்திரு சாமி. சிவஞானம் எம். ஏ. அவர்கட்கும் நூலகப் பதிப்பு மேலாளர் உயர்திருவாளர் அ. பஞ்சநாதன் எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்., அவர்கட்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை வெளியிடப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும் நன்முறையில் அச்சிட்டுத்தந்த, சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருணை உள்ளங்கொண்ட பேராளர்கள் தங்கள் தங்களிடமுள்ள ஓலைச் சுவடிகளையும், நூல்களையும், எமது சரசுவதி மகாலில் இடம் பெறச் செய்து, தங்கள் தங்கள் புகழை நிலைநாட்ட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தொகுதியில் அறியாமையால் ஏற்பட்ட குற்றங்களை நீக்கிக் குணம் கொண்டு வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

தஞ்சாவூர்
7—10—2003

புலவர். வீ. சொக்கலிங்கம்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
சரசுவதி மகால்

பொருளடக்கம்

சைவ நெறிமுறைகள்

சைவத் திருமுறைகள்

சைவத் தோத்திரங்கள்

கட்டளை நூல்கள்

வைணவ நூல்கள்

காமநூல்

ஜைன நூல்

சில்ப சாத்திரம்

வீர சைவ நூல்

தத்துவ நூல்

சித்தர் பாடல்கள்

பொது - திருமுகம்

மந்திரங்கள்

எமது சரசுவதி மகாலுக்குத்

தங்களிடமிருந்த ஓலைச் சுவடிகளை அன்பளிப்பாகத் தந்த பெருந்தகையாளர்களின் பட்டியல்

திருவாளர். **விசயவேலவன்** அவர்கள்
6/162, இந்திரா நகர், கோவில்பட்டி

திரு. **மந்தக்காளை** அவர்கள்
விவசாயம், 6/76, வடக்கு வளைவு
அம்பலக்காரன் பட்டி, மேலூர்

திரு. **மு. சிவராமன்** அவர்கள்
ஓய்வுபெற்ற இயக்குநர், 1, பாரதி தெரு
இராவ் பகதூர் நகர், மயிலாடுதுறை

திருமதி. **இராஜலட்சுமி ஜினகுமார்** அவர்கள்
ஜைனத் தெரு, கரந்தை, தஞ்சாவூர்

திரு. **கோனேரி அய்யா** அவர்கள்
தொண்டராயன் பாடி, அய்யனாபுரம்
தஞ்சை மாவட்டம்

செப்பறை மடம், திருநெல்வேலி மாவட்டம்
(தொடர்ச்சி)

திரு. **இரெ. இராஜசிங்** அவர்கள்
16/8 சுப்பிரமணிய புரம் தெரு
திசையன் விளை, திருநெல்வேலி மாவட்டம்

திரு. **இராமலிங்கம்** அவர்கள் B.D.O. ஓய்வு
அம்மாபேட்டை

திரு. சி. சுப்பராமன் அவர்கள்
54, வெங்கிடசாமி ரோடு, R.S. புரம், கோவை

திரு. K. குணபாண்டியன் அவர்கள்
231, கொள்ளுப் பேட்டைத் தெரு
கீழவாசல், தஞ்சாவூர்

திரு. R. இராதாகிருஷ்ணன், அவர்கள்
சோதிடர், வளையல்காரன் புதூர்
மயனூர் வழி.

திரு. வீரன் ஆசாரி அவர்கள்
புதுக்காவல் தெரு, கள்ளப் பெரம்பூர்
தஞ்சாவூர் மாவட்டம்.

திரு, N. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள்
சின்னைய நாயக்கன் தெரு, பாம்பாட்டித் தெரு
கீழவாசல், தஞ்சாவூர்

திரு. K.R. சுப்பிரமணியம், அவர்கள்
கல்லூர், எம்.பொதையூர் அஞ்சல்
திட்டக்குடி வட்டம்

திரு. டாக்டர் டி.கெ.எ. சாரி அவர்கள்
R.I.M.P.

திருமதி. வே. சுப்புலட்சுமி, அவர்கள்

திரு. M.S. முத்துசாமி அவர்கள்
மன்னங்காடு, தாமாங்கோட்டை
பட்டுக்கோட்டை

திரு. அ. முருகேசன் அவர்கள்
37, நயினியப்ப நாயக்கன் தெரு
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை — 2

திரு ***சி. கோவிந்தராசனார்*** அவர்கள்
பேராசிரியர், அரிக்காரத்தெரு,
கரந்தை, தஞ்சாவூர்

திரு **E. குப்புசாமி B.E.,** அவர்கள்
ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர்,
கன்னடிய பாளையம் ஈரோடு மாவட்டம்

திரு **T. இராஜலிங்கம்** அவர்கள்
617-B. திருவள்ளுவர் அவின்யூ,
கொள்ளிடம், டோலகேட், பிட்சாண்டார் கோவில், திருச்சி

திரு ***பாலகிருஷ்ணன்*** அவர்கள்
I.C.F. காலனி, சென்னை

திரு **S. இளங்கோவன்** அவர்கள்
த/பெ. ஆர். சக்திவேல் அவர்கள்
3, குழந்தைவேல் தெரு, மன்னார்குடி

திரு ***முருகா கிருஷ்ணமூர்த்தி*** அவர்கள்
நகர தெய்வீகப் பேரவை, வாழப்பாடி, சேலம்

திரு **G. *மீனாட்சிசுந்தரம்*** அவர்கள்
3, சோழன் நகர், நாகைரோடு
மாணிக்கபுரம், தஞ்சாவூர்

திரு ***ராஜாபாதர்*** அவர்கள்
30, சாமிஐயர் தெரு, கொசப்பாளையம்,
ஆரணி.

பிழை திருத்தம்

இந்த 26-ம் தொகுதியில் 1 முதல் 96 பக்கங்கள் முடிய வரிசை எண்கள் தவறாக அச்சாகியுள்ளன. எனவே சரியான எண்களை திருத்தம் செய்து கொள்ள வேண்டுகிறோம். எஞ்சிய பக்கங்களில் (97 முதல் 292 முடிய) சரியான வரிசை எண்கள் உள்ளன.

உள்ளவை	திருத்தம்	உள்ளவை	திருத்தம்	உள்ளவை	திருத்தம்
4560	3612	4590	3642	4620	3672
4561	3613	4591	3643	4620	3673
4562	3614	4592	3644	4620	3674
4563	3615	4593	3645	4620	3675
4564	3616	4594	3646	4620	3676
4565	3617	4595	3647	4620	3677
4566	3618	4596	3648	4620	3678
4567	3619	4597	3649	4620	3679
4568	3620	4598	3650	4620	3680
4569	3621	4599	3651	4620	3681
4570	3622	4600	3652	4620	3682
4571	3623	4601	3653	4620	3683
4572	3624	4602	3654	4620	3684
4573	3625	4603	3655	4620	3685
4574	3626	4604	3656	4620	3686
4575	3627	4605	3657	4635	3687
4576	3628	4606	3658	4636	3688
4577	3629	4607	3659	4637	3689
4578	3630	4608	3660	4638	3690
4579	3631	4609	3661	4639	3691
4580	3632	4610	3662	4640	3692
4581	3633	4611	3663	4641	3693
4582	3634	4612	3664	4642	3694
4583	3635	4613	3665	4643	3695
4584	3636	4614	3666	4644	3696
4585	3637	4615	3667	4645	3697
4586	3638	4616	3668	4646	3698
4587	3639	4617	3669	4647	3699
4588	3640	4618	3670	4648	3700
4589	3641	4619	3671	4649	3701

உள்ளவை	திருத்தம்	உள்ளவை	திருத்தம்	உள்ளவை	திருத்தம்
4650	3702	4660	3712	4671	3723
4651	3703	4661	3713	4672	3724
4652	3704	4662	3714	4673	3725
4653	3705	4663	3715	4674	3726
4654	3706	4664	3716	4675	3727
4655	3707	4665	3717	4676	3728
4656	3708	4666	3718	4677	3729
4657	3709	4667	3719	4678	3730
4658	3710	4668	3720	4679	3731
4659	3711	4669	3721	4680	3732
		4670	3722		

உ

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

இருபத்தாறாவது தொகுப்பு

இலக்கியப் பகுதி

வரிசை எண் : 4560 சுவடி எண் : 1969-a

திருவாசகம்

ஏடுகள் : 134 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 20 × 3½ செ மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள் : திருமுறை

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

தொல்லை யிரும்பிறவி சூழுந் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே ... யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென் னுந் தேன்.

நூல்

சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாழ் வாழ்க
இமைப் பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள் வாழ்க

முடிவு :

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே ! — ௯

திருச்சிற்றம்பலம்

ஆக 652, அகவல் 4 ஆக துகை 656

குறிப்பு :

இது, அச்சாகியுளது. 12 திருமுறைகளில் இது 8-ஆம் திருமுறை. 'மாணிக்க வாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையார் கையெழுத்து' என்று கைச்சாத்திடப்பட்ட சிறப்புடையது அதன் பிரதியாகுமிது.

வரிசை எண் : 4561 சுவடி எண் : 1910-b

திருவாசகத் துகை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 20 × 3½ செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் திருமுறை நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

சிவபுராணம் சிவனுடைய வனாதி
சற்காரிய முறைமை
கீர்த்தித் திருவகவல் சிவனுடைய
கீர்த்தி செப்பல்
திருவண்டப் பகுதி யகவல்--சிவனது
தூல சூக்குமத்தை வியந்தது

முடிவு

பூங்கழல் ஆனந்த லயம்
அச்சோப்பத்து அனுபவ வழிவு
திருவாசகத் துகை முற்றும்

காலம் :

922-ம் வருஷம் தை மாதம் 15-ந் தேதி எழுதி முகிந்தது.
திருச்சிற்றம்பலம், சிவமயம், திருச்சிற்றம்பலம்.

குறிப்பு :

திருவாசகத்தில் உள்ள தலைப்புகளின் பொருள் கூறுவது.

வரிசை எண் : 4562 சுவடி எண் : 1960-c

திருவிசைப்பா

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 20 × 3½ செ.மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : திருமாளிகைத்தேவர் பொருள் : சைவத் திருமுறை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம்
கோயில் — பண் : பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே

முடிவு :

சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முகலுமா மறிந்தோ
மரிவை பொய்யாதே. — 11

திருச்சிற்றம்பலம்

ஆகத்திருவிருத்தப் — 68

குறிப்பு :

இது, ஒன்பதாந் திருமுறை. இதில் உயர் கொடியாடை எனத் தொடங்கும் கோயில் (சிதம்பரம்), உறவாகிய யோகமும் எனத் தொடங்கும் கோயில், இணங்கிலா வீசனே எனத் தொடங்கும் கோயில், ஏக நாயகனை எனத் தொடங்கும் திருவீழி மிழலை. பொய்யாத வேதியா எனத் தொடங்கும் திருவாவடுதுறை ஆகிய திருவிசைப் பாக்கள் உள்ளன. அச்சாகியுள்ளன.

வரிசை எண் : 4563 சுவடி எண் : 1960-அ

திருவிசைப்பா

ஏடுகள் : 22½ கி. எண்ணிக்கை : 600 அளவு: 20 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு: 10 வரிகள் ஆசிரியர்: கருவூர்த்தேவர் பொருள்: சைவத் திருமுறை

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கோயில் - பண் : புறநீர்மை

கணம்விரி குடுமிச் செம்மணி
கவைநாககறை யன்றகட் செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறி கொள்
வெள்ளெயிற்றுப் பாம்பணி பரமாகங் கோவின

முடிவு :

கரும்பனைய தீந்தமிழ் மாலை தடம்பொளின்
மருதயாவுதிப் பலருங் கண்டத் தண்டத் தண்ட
வானவர்கோன் மருவிடந் திருவிடை மருதே — 10

திருச்சிற்றம்பலம்

ஆகத்திருவிருத்தம் — 171

குறிப்பு :

இதில், மேற்கண்ட கணம்விரி குடுமி எனத் தொடங்கும் கோயில் (சிதம்பரம்), கலைகடம் பொருளும் எனத் தொடங்கும் களந்தை யாதித்தீச்சுரம், தளிரொளி மணிப் பூம் எனத் தொடங்கும் திருக்கோட்டூர் மணியம்பலம், புவன நாயகனே எனத் தொடங்கும் திருமுகத்தலை, நீரோங்கி வளர்கமல எனத் தொடங்கும் திரிலோக்கிய சுந்தரம், அன்னமாய் விசும்பு எனத் தொடங்கும் கங்கை கொண்ட சோழீச்சுரம், திருவருள் புரிந்தா எனத் தொடங்கும் திருப்பூவணம், உலகெலந் தொழவந் எனத் தொடங்கும் இராசராசீச்சரம், வைய செஞ்சோதி எனத் தொடங்கும் திருவாவடுதுறை ஆகிய திருவிசைப்பாக்கள் உள்ளன. அச்சாகியுள்ளன.

வரிசை எண் : 4564 சுவடி எண் : 1960-e

திருவிசைப்பா

எடுகள் : 3½ கி. எண்ணிக்கை : 200 அளவு : 20×3½ செ.மீ.

பக்கத்திற்கு: 10 வரிகள் ஆசிரியர் : நம்பிகாடநம்பி பொருள் : சைவத் திருமுறை நிலைமை: நல்ல நிலை முழுமை; முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவாரூர் – பண் : பஞ்சமம்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கணாயகர ராய்ப் பவனி போந்திருணெ
முரிவதோற் முரிவுமை யளது

முடிவு :

வாரார் வன்சொற் கண்ட ராதித்தன்
அருந்தமிழ் மாலை வல்லார்
பேரா வுலகிற் பெருமை யோமே
பேரின்ப மெய்து வரே ! —10

திருச்சிற்றம்பலம்.
ஆக திருவிருத்தம் - 193

குறிப்பு :

இதில், கைக்குவான் முத்தின் என்ற திருவாரூர், முத்தீயாளர் என்ற கோயில் (சிதம்பரம்) ஆகிய திருவிசைப் பாக்கள் உள்ளன.

அச்சாகியுள்ளன. 9-ந் திருமுறை.

வரிசை எண் : 4565 சுவடி எண் : 1960-f

திருவிசைப்பா

ஏடுகள் : 1½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 20×3½ செ.மீ.

பக்கத்திற்கு:8 வரிகள் ஆசிரியர்: வேணாட்டடிகள் பொருள் : சைவத் திருமுறை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கோயில் - பண் : புற நீர்மை

பொசியாதோ கீழ்க்கொப்பு நிறை குள மென்றது போலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவ பெருமானோ வெனினு
மிசை யானா லென்றிறத்து

முடிவு :

தேவே தேவே தென்தில்லைக் கூத்தாடி நாயடியேன்
சாவாயவு நினைக்க கண்டாலினியுனக்குத் தகடுப்பர்தே. —10

திருச்சிற்றம்பலம்

ஆகத் திருவிருத்தம் 203

குறிப்பு :

இதில், ஒரு திருவிசைப்பாவே உளது அச்சாகியுளது. 9-ந் திருமுறை.

வரிசை எண் : 4566 சுவடி எண் : 1960-g

திருவிசைப்பா

ஏடுகள் : 6½ கி எண்ணிக்கை : 250 அளவு : 20 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : திருவாலி யமுதனார் பொருள் : சைவத் திருமுறை நிலைமை: நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

கோவில் பாதாதிகேசம் பஞ்சமம்

மையன மாதொர் கூறன மால் விடையேறி
மான்மறி யேந்திய தடங்
கையன் கார்புரையுங் கறைக் கண்டன்
கனன் மழு வனைய ஞான

முடிவு :

யறை சென்னெங் வானகரும் பின்னி யாலை சூழ் மயிலை
மறைவல வாலி சொலை மகிழ்ந் தேத்துக
வானெளிதே. —10
திருச்சிற்றம்பலம்
ஆகத் திருவிருத்தம் 244

குறிப்பு :

மேற்சொன்னதோடு, பவளமால் வரையை எனத் தொடங்கும் கோயில் (சிதப்பரம்) அல்லாய்ப் பகலாய் எனத் தொடங்கும் கோயில், கோலமலர் நெடுங்கண் எனத் தொடங்கும் கோயில், திருவிசைப்பாக்கள் உள்ளன. ஒன்பதாம் திருமுறை.

வரிசை எண் : 4 67 கவடி எண் : 1960 h

திருவிசைப்பா

ஏடுகள் : 3½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 20×3½ செ.மீ. பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : புருடோத்தம நம்பி பொருள் : சைவத் திருமுறை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் !

கோயில்-பண்:பஞ்சமம்

வாரணி நறுமலர் வண்டு கெண்டு
பஞ்சமஞ் செண்பக மாலை மாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந் திவை நம்மை மயக்குமாலோ.

முடிவு :

பண்ணுதல் பத்தும் பயின்றாடிப் பாடினா
ரெண்ணுதலைப் பட்டிங் கனிதா விருப்பாரே' —12
திருச்சிற்றம்பலம்

ஆகத்திருவிருத்தம் 266.

குறிப்பு :

இதில், இரண்டு பதிகங்களுமே சிதம்பரத்தைச் சார்ந்த திருவிசைப்பா. அச்சாகியுளது, 9-ந் திருமுறை

வரிசை எண் : 4568 சுவடி எண் : 1960-g

திருவிசைப்பா

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 50 அளவு : 20 × 3½ செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர்: சேதிராயத் தேவர் பொருள் : சைவத்திருமுறை

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம :

கோயில்-பண்: நட்டராகம்

சேலுலாம் வயற் றில்லையுளி ருமைச்
சாலநா ளையன் சார்வதவா லிவள்
வேலையார் விடமுண்டுகந்தீ ரென்று
மாலதாகு மென் வாணுதலே. —1

முடிவு:

தூய வாறுரைப்பார் துறக்கத்திடை
யாயவின்ப மெய்தி யிருப்பார்களே! — 0

திருச்சிற்றப்பலம்
ஆகத் திருவிருத்தம் 276

குறிப்பு :

இவர் பதிகம் ஒன்று மட்டும் உளது மேலும் இதனைத் தொடர்ந்து மாலுலா மனம் எனத் தொடங்கும் திருவிடைக்கழி திருவிசைப்பா பதிகம் உளது.

வரிசை எண் : 4569 சுவடி எண் : 1960-j

திருப்பல்லாண்டு

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 80 அளவு : 20 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சேந்தனார் பொருள்: சைவத் திருமுறை நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து ; தமிழ்

தொடக்கம் :

கோயில்--பண் : பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெலாம் விளங்க.

முடிவு :

செந்தே னெனைப் புகுந் தாண்டுகொண்
டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று
பல்லாண்டு கூறுதுமே ! —13

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு முற்றும்

குறிப்பு :

இது, சிதம்பரத்தில் அருயளிது. ஒன்பதாந் திருமுறை. அச்சாகியுளது.

வரிசை எண் : 4570 சுவடி எண் : 1961-a

வினாயக பூசை அட்டவணை

ஏடுகள் : 5 க. எண்ணிக்கை : 100 அளவு : 10 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்

தொடககம் :

பூசாத் தானஞ் சுத்தி செய்து
பூசை வுபகரண மியற்றி கரனியாசம்
பண்ணும்படி.

காம் இருதயாய நம
கீம் சிரசே சுவாகா
கூம் சிகாயை வவுஷடு

முடிவு :

ஆசமனஞ் சகளீகரணஞ் செய்து
பிராச்சித்தஞ் செபித்துக் கொள்ளவும்
பிள்ளையார் பூசை அட்டவணை
முற்றும்

குறிப்பு :

இது, விநாயகரை, தீட்சை பெற்றவர்கள் பூசை செய்யும் முறையைக் கூறுகிறது.

வரிசை எண் : 4571 சுவடி எண் : 1961-b

கேதாரபூசை அட்டவணை

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 150 அளவு : 10×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சைவத்தோத்திரம் நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூசா மண்டப மலங் கரித்துப்
பூசை வேதிகை ஆசாரங் கூட்டி
பூசை யுபகரண மியற்றித் திரு
மஞ்சனத்துக்குச் சந்தனம் புட்பம் போட்டு

முடிவு :

கற்பூர ஆலத்தி பண்ணி பராமுகம் பூசித்து
இருதையத்தில் ஒடுக்கி அற்கியமும் ஒடுக்கி
நின்மாலிய மாற்றிப் பிராயச்சித்தஞ் செபித்துக்
கொள்ளவும்.

கேதாரபூசை அட்டவணை முற்றும்.
சுவாமி சாலிவாடீசுர காந்திமதியம்மன் துணை.

குறிப்பு :

சிவதீக்கை பெற்றவர்கள் கேதார நாதரைப் பூசிக்கும் முறைமை இதில் கூறப்பட்டுளது.

வரிசை எண் : 4572 சுவடி எண் : 1961-c

சரசுவதி பூசை அட்டவணை

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 130 அளவு : 16×3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூசாத் தானஞ் சுத்தி செய்து
பூசை யுபகரண மியற்றி சுகாசனமாக
யிருந்து காநியாச மங்க நியாசப்
பண்ணும்படி.

ஐம் இருதயாய நம
ஐம் சிரசே சுவாகா
ஐம் சிகாயை வவுஷடு

முடிவு :

தேனுமுத்திரை கொடுத்து துற்காயை சுவாகா
மகாலட்சுமியை சுவாகா சரசுவதியை சுவாகா
என்று நைவேதித்துப் பானியங் கொடுத்து
முகவாச மன்ற ....

குறிப்பு :

இதில், கலைமகள் வழிபாடு செய்யும் முறை, சைவானுஷ்டானம் பெற்றவர்கட்குக் கூறப்பட்டுளது.

இதன் பின்னர் ஏட்டெண் 10 கொண்ட உதிரி ஏடு ஒன்று உளது.

வரிசை எண் : 4573 சுவடி எண் : 1962-a

காந்திமதி (மாலை)

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 120 அளவு : $15\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ

பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

> யெரிக்கும் உன பதத்தை என்னாளும் போற்றி செய்யும்
> சிர்க்கு மன்பருடன் சேர்ந்திருக்கச் செய்யாயோ
> வாரிருக்குங் கொங்கை வடிவே மடமயிலே
> காரிருக்குஞ் சொல் நெல்லை காந்திமதித் தாயாரே ! — 1

முடிவு :

> பொன்னழகு கண்டேன் பொதியாசலத்தில் வரு
> முன்னழகு கண்டேன் முகத்தழகு கண்டேன்
> பின்னழகு கண்டேன் பிறைசூடும் பெம்மானோ
> டுன்னழகு கண்டேன் உலகுடைய மாதாவே ! — 26

குறிப்பு :

இதில், தலைப்பு இல்லை. முகப்பு ஏட்டில் வேறொரு பாடல் உள்ளது. இது, திருநெல்வேலி காந்திமதியம்மையைத் துதிக்கும் முகத்தான் பிற சக்திகளையும் சேர்த்துக் கூறுகிறது.

வரிசை எண் : 4574 சுவடி எண்: 1962-b

சங்கர சதாசிவ மாலை

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 200 அளவு : $15\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம்:

ஹரி : ஓம் நன்றாக

பாரெங்கு நின்று படைப்புமுதற் காத்தளித்து
நீரெங்குந் தானாய் நிறைந்தாய் பராபரமே
சீரெங்குமே தளைக்க சீராசை யூர்வாழுஞ்
சாரங்கபாணி தொழுஞ் சங்கர சதாசிவமே ! — 1

முடிவு :

அத்திமுகன் வாழி மறை அந்தணர்கள் தான் வாழி
முத்திதரு மெய்நூல் மொழிவோர் பதம் வாழி
சித்திபத்தி யூருறுஞ் சீராசையூர் வாழுஞ்
சத்தியுமை ஆவுடையாள் சங்கரனார் வாழியதே — 44

குறிப்பு :

இராசை என்பது இராசபாளையமா இல்லை சங்கரன் கோயிலா என்பது விளங்கவில்லை. ஆவுடையம்மன் சங்கரன் கோயில் அம்மைக்குப் பெயர். சங்கர நாராயணர் அங்குள்ள சிவன் (திருமால்) பெயர்.

இதன் பின்னர் ஒருஎடு மனுச்சக்கரவர்த்தி 595 எனத் தொடங்கி சாலிவாகனன் 1670 என முடிகிறது.

வரிசை எண் : 4575 சுவடி எண் : 1962-c

தனிப் பாடல்கள்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 16×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மண்ணி லிரு ளொட்டிச் சவி வந்தாலுறு பயனை
எண்ணுடையோர்க் கல்லாது காணாபோல்—நண்ணுமலம்

வாட்டுங் குருபரனே வந்திடினு மெஞ்ஞானம்
நாட்டமிவர் காணார் நயந்து.

முடிவு :

தெரிவைப் பருவத்தில் செய்யினையாள் நல்ல
புருவத் தலைவனொடு புல்கி—யுருகியே
இன்புறுவர் பக்குவத்தி லீசனடி சேர்ந்தவரு
மின்புறுவர் பின்பகலா ரின்று.

குறிப்பு :

இது, நீதிநூல் போல் காணப்படுகிறது. தலைப்பு இல்லை.

வரிசை எண் : 4576 சுவடி எண் : 1952-டீ

பராபரக்கண்ணி

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 16×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர்: தாயுமானார் பொருள்: சைவத் தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

என்னைக் கொடுக்க விசைந்த விருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ—பராபரமே
இன்றோ விருவினைவந் தெய்தியது நானென்ற
தன்றே விளைந்ததன்றோ வாற்றேன்—பராபரமே.

முடிவு :

உன்னைநினைந் துணனிறைவி னுள்ளே உலாவு மென்னை
யன்னை வயத்தி லடையாய்—பராபரமே.

குறிப்பு :

பராபரக் கண்ணியில் சில பாடல்களே உள்ளன.

வரிசை எண் : 4577 சுவடி எண் : 1962-e

சோதிடநூல்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : 15×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூமி பார்க்க

திருவாதிரை பரணி மூல மனுசம்
உத்திரங்கள் மூன்று
திருவோணஞ் சோதி சித்திரை பூசம்
மகமிவை நன்று.

முடிவு :

.........மகழிர் மைந்தனுடன் வெய்யோன
.........லாதனக்கு தாமதமே நாழிகையுங்

குறிப்பு :

இதில், எரு வைக்க, குடி புக, நாள் வித்து, நாட் கதிர், புதியதுண்ண, அகமெடுக்க, பகல் நாழிகை யறியும்படி ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 4578 சுவடி எண் : 1962-f

திருவருட்பயன்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை: 250 அளவு: 15×3 செ.மீ.
பக்கத்திற்கு: 12 வரிகள் ஆசிரியர் : உமாபதி சிவம் பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பதிமுது நிலை
நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

முடிவு :

கள்ளத்தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக. — 10
அணைந்தோர் தன்மை முற்றும்

குறிப்பு :

இது, சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று இது, 100 குறள் வெண்பாக்களைக் கொண்டது. அச்சாகியுளது. எமது சுவடி எண் 54-f/D-993 போன்றது.

வரிசை எண் : 4579 சுவடி எண் : 1962-g

சோதிடநூல்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 100 அளவு : 14 × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றிறது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

(அ)ட்டமத்தில்ச் சங்கரனு
மைய மேற்றான்
அயனுமோர் — — — ழந்தான்
அஞ்சினாலே சுக்கிரனுங் கண்ணிழந்தான்

முடிவு :

சித்திரை சோதி சிறந்த ரேபதி
அத்தமோ டோண அவுட்டமிரு பூசம்

தப்பாம லோதிமயிர் களைய வல்லார்க்கு
யெப்போதும் நிற்குந் திரு.

குறிப்பு :

உதிரி ஏடுகளாக உள்ளன. பிடவையுடுக்குநாள் முடிகளைய முதலானவை உள்ளன.

கடைசி பக்கம் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 4580 சுவடி எண் : 1962-h

சிவப்பிரகாசச் சிந்தனை

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 1300 அளவு : 17 × 3½ செ.மீ

பக்கத்திற்கு: 11 வரிகள் ஆசிரியர் : கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்

பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை: மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஒளியான திருமேனி யுமிழ்தான.........—
—ளிய ராவரு மியானை கழனாளுமறவாம
லளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே !

ஒளியான திருமேனி எ.து. ஞானப் பிரகாசமான
திருமேனியிலே நின்றும்.

முடிவு :

பண்ணுமதையு வுடணிடமாக நின்று சட்சு——
— — ருந்தி ருபத்தை யறிந்தாற் ——...—...
மேற்றலுரு செய்ய ———— ———

குறிப்பு :

இது, எலிகடித்தும், ஒடிந்தும் உளது, இது அச்சாகியுளது, உரை மிகத் தெளிவாக உளது.

வரிசை எண் : 4581 சுவடி எண் : 1963

திருவாசகம்

ஏடுகள் : 110, கி. எண்ணிக்கை : 5000 அளவு : 13 × 4½ செ.மீ.
பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள் : சைவத் திருமுறை நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம் சொக்கலிங்கம் துணை

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளை நீக்கி
+ + × + +
திருவா சகமென்னுந் தேன்

நூல்

சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
விமைப் பொழுது மென்னெஞ்சி னீங்காதான்றாள் வாழ்க

முடிவு :

செம்மை நலமறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மல மறுவித்து முதலாய முதல்வன்றா
ணம்மையுமோர் பொருளாக நாய்சிவிகை யேற்றுவித்த
யம்மையெனக் கருளியவா றார் பெறுவா ரச்சோவே ! —9

திருச்சிற்றம்பலம்
திருவாசக முற்றும்

காலம் :

967—ஆம் வருஷம் ஆடி மாதம் 18-ந் தேதி நாயத்துக்கிளமையும் அனுச நட்சேத்திரமும் பெற்ற சுபதினத்தில் திருவேற்காடு வீராசாமி முதலியா ரவர்கள் குமாரர் வெங்கடாசல முதலியாரவர்களுக்குச் சகல பாக்கிய தீற்காயிசு சிவஞான சிவசிந்தையு மேன்மேலும் பெருகவென்று சிந்தித்துத் திருவாசக மெழுதினது. திருச்சிற்றம்பலம்

குறிப்பு :

இது, அழகாக எழுதப்பட்டுளது. அருமையாக உளது. சில பாட வேறுபாடுகள் காணக் கிடைக்கின்றன. அச்சாகியுளது. கடைசியில் பாட்டு அட்டவணை உளது.

வரிசை எண் : 4582 சுவடி எண் : 1964-a

விநாயகர் அகவல்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 7½×4 செ.மீ.

பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர்: ஒளவையார் பொருள்: சைவத் தோத்திரம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

சீதக் களபச் செந்தா மனப்பூம்
பாதச் சலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞானுப் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெரிப்பு

முடிவு :

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக வினாயக விரைகழல் சரணே !
ஓம்சிரியும் கிறியும் கங்கணபதி நம.

× + × × × ×
இது சிவம் பண்ண நினைத்தது சித்தி.

குறிப்பு :

இது, அச்சாகியுளது. எமது சுவடி எண் 689-i/D-549 போன்றது.

வரிசை எண் : 4583 சுவடி எண் : 1964-b

கந்தர் சஷ்டி கவசம்

ஏடுகள் . 12 கி. எண்ணிக்கை: 200 அளவு : 7½×4 செ.மீ.

பக்கத்திற்கு: 13 வரிகள் ஆசிரியர் : தேவராயன் பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

நொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

சிவமயம்

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி !

தனியன் வெண்பா

வேலர்சஷ் டிக்கவசம் விரும்பித் தொழுவோர்
× × × × ×
வல்லாண்மை யுண்டென்ற வா.

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிட்டரு › குதவுஞ் செங்கதிர் வேலோன்

முடிவு :

சரணம் சரணஞ் சரஹண பவவோம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

காலம் :

பரமதிச்சா வருஷம் வைகாசி மாதம் 1-ந் தேதி கூபம் வீரமுடியா பிள்ளை பதில் யேடு யெழுதியது.

குருவே துணை.

குறிப்பு :

இது, அச்சாகியுளது. எமது சுவடி எண் 1000-a/D-1826 போன்றது.

வரிசை எண் : 4584 சுவடி எண் : 1964-c

கந்தரனுபூதி

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 200 அளவு : 7½×4 செ.மீ. பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்
நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து ருகத்
தஞ்சத் தருள் சண்முகனுக்கியல் சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம் பணிவாம்

முடிவு :

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே ! —51.
கந்தானுபூதி முற்றும்

குறிப்பு :

இது, அச்சாகியுளது. எமது சுவடி எண் 1196/D-1821 போன்றது.

வரிசை எண் : 4585 சுவடி எண் : 1964-d

இடும்பன் கவசம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 7½ × 4 செ. மீ
பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

ஹரி: ஓம்
ஓம் யிடும் பேசாய நம
அகஷ்த்திய சீஷா அறுமுக தூதா

அடியேன் வல்வினை யகத்திட வருவாய்
செகந்தனி லெங்கும்

முடிவு :

பழனியில் வாசா பங்கயத் தவனே
அரகரா யென்றன்முன் அடியேனை ரெட்சி
கடம்பா யென்தனைக் காத்து ரெட்சி

குறிப்பு

பழனிமலையில் விற்றிருக்கும் இடும்பனைக் காக்குமாறு வேண்டுவது.

வரிசை எண் : 4586 சுவடி எண் : 1964-எ

கணபதி தோத்திரம்

ஏடுகள் : 4 கி எண்ணிக்கை : 150 அளவு : 7½ × 4 செ.மீ
பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி: ஓம்

கீதமலர் மதவேள் முகமு மாகி
திருமார்பில் முப்பிரிநூல் கரபோரைந்தும்
பாதமதில்ச் சிலமபு தண்டை யோசை செய்ய

முடிவு :

மதுரமே கருகூலமே யென்றுனைப்பாடி
யுருக வருள் காசிவாள் துண்டிராச
கணபதி யெனும் பெரிய குண மேருவே
அருள் கருணாகரக் கடவுளே.

குறிப்பு :

தலைப்பு இல்லை. செய்யுள் முடிபுகண்டு தலைப்பு தரப்பட்டது. இது, காசியில் உள்ள துண்டி விநாயகர் மீது பாடப்பட்டதாகும்.

வரிசை எண் : 4587 சுவடி எண் : 1964-f

ருத்ர மந்திர சாத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை: 100 அளவு: 7½ × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திர சாத்திரம் நிலைமை . நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் சிவமயம்
ஓம் நமோ பகவதே நீலகண்டாய
கௌரி சகாய சூல டமருக தருய
பரமோ தூளித விக்கிராய
சுந்திதை குடாய

முடிவு :

ரெட்சி ரெட்சிமம் சறுவாரிட்டம்
சீக்கிரம் சீக்கிரம நிவாராய நிவாராய
ரமாமாம் ஓம் பட் டாடா டாட்சடர
காளகூட விஷபட்சறாய
நீலகண்டாய சுவாகா

குறிப்பு :

இதில் தலைப்பு இல்லை. ஸ்ரீ ருத்ர நாமங்கள் இதில் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 4588 சுவடி எண் : 1964-g

கணபதி சோத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு: 7½ × 4 செ.மீ.

பக்கத்திற்கு: 15 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

ஹரி : ஓம்

பூமக ளுரையுந் தாமரை முகமும்
புயமுமோர் மருப்பு மைங்கரமும்
நேமமார் சிறுகட் பெருகிய செவியும்
நெடும்புரி நூல்திகழ் மார்புங்

முடிவு :

திகட சக்கரச் செம்முகத் தைந்துளரன்
தகட சக்கரத் தாமரை நாயகன்
அகடச் சக்கர வின்மணி யாயுரை
விகட சக்கர மெய்ப்பதம் போற்றுவாம்

குறிப்பு :

இது, விநாயகனைப் பூசிப்பதற்கு உதவுவது.

வரிசை எண் : 4589 சுவடி எண் : 1964-h

முருகன் தோத்திரம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : $7\frac{1}{2} \times 4$ செ.மீ

பக்கத்திற்கு: 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் ஹரி :

திருமருகா முக்கணான் மகனே
யானைக் கிளைய வயில் வேலரசே
அடியேன் வல்வினை யகற்றிடு
மொருகை திரிபுர மெரியச் சிரிப்பவன் மகனே

முடிவு :

நீலமயி லேசனே சுத்தனே அத்தனே
சூர சங்காரனே அகிலபுவனந்தொழு
மாதியே சோதியே ஆறுமுகப் பெருமாளே.

குறிப்பு :

இது, திருப்புகழ்போல் காணப்படுகிறது

வரிசை எண் : 4590 சுவடி எண் : 1964–i

குருதோத்திரம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 20 அளவு : 7½ × 4 செ.
பக்கத்திற்கு: 14 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை: பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவமயம்
ஓம் பறகுருவே நம
ஓம் பரமேஷ்டி குருவே நம
ஓம் பரம குருவே நம
ஓம் பரமடுேற்றுவ குருவே நம

முடிவு :

ஓம் சுயம் பிரகாச குருவே நம
ஓம் சருவசீவ தயாபர குருவே நம
ஓம் பரமேஷ் பாராய நம
பஞ்சாட்சராய நம
ஓம் அரகர சிவ சிவ ஸ்ரீ குரு நமச்சிவாய நம.

குறிப்பு :

இது, குரு மூர்த்தத்தை அருச்சிக்கும் மந்திரமாகும்.

வரிசை எண் : 4591

சுவடி எண் : 1964-j

முருகன் தோத்திரம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 250 அளவு : 7½ × 4 செ.மீ

பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுப்பெறாதது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி: ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
ஓம் அரிஹரி புரந்தர அபிநவப்
பிரமா முக அண்டாண்ட பகிரண்ட
எண்டிசைப் பிரசண்டபத அஷ்சரப்
பிரதேஷ்சர அகில

முடிவு :

அயில்வே லரசே பொருளே குமரா
புனிதன் வஞ்ச நெஞ்சம் பொல்லா மயக்க
மறுத்து அஞ்சலென வந்தாண்டருள்
குருபரா

குறிப்பு:

தலைப்பு இல்லை : ஏடுகள் கலந்துள்ளன.
மந்திர சாத்திரம் போலும் காணப்படுகிறது.

வரிசை எண் : 4592

சுவடி எண் : 1964k-k

மந்திரசாத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை: 100 அளவு: 7½ × 4 செ.மீ

பக்கத்திற்கு : 16 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திர சாத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

ஓம் ஆதி விந்துவின் கிலியென வாகி
நீதி முக்கோண நின்ற நிலைமேல்த்
துலங்கரு கொண்டு சூழ் வட்டமிது மேல்

முடிவு :

சரணம் கர்த்தா சரணங்
காரணா சரணஞ் சரணஞ் சரணம்
நின்றாளே சரணம்

குறிப்பு :

தலைப்பு இல்லை. ஏடுகள் கலந்துள்ளன,

வரிசை எண் : 4093 சுவடி எண் : 1964-1

சோடச நாமம்

ஏடு : 1 கி. எண்ணிக்கை : 20 அளவு : $7\frac{1}{2} \times 4$ செ.மீ

பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

ஓம் சுமுகாய நம
ஓம் ஏகதந்தாய நம
ஓம் கபிலாய நம
ஓம் கஜகர்நாய நம

முடிவு :

விசைய நிற்த்த ஊர்த்தன
அரித்திர மகா கணபதியே நம.ஓம்
ஹரி : ஓம் அகஸ்த்தியாய
யென்குருவே நமச்சிவாய நம.

குறிப்பு :

இது, விநாயகரை அருச்சிக்கும் 16 மந்திரங்கள் கொண்டது.

இதன்பின் சக்கரத்துடன், 'இந்தமந்திரத்தை கோடி உரு செபித்து முகிந்தபின் சகல விஷங்களுக்கும், சகல வியாதி திஷ்டி முதலானது களுக்கெல்லாம் குழையடிச்சு விபூதி போடவும்' என்றுளது.

வரிசை எண் : 4594 சுவடி எண் : 1965-a

வல்லடியார் வைந்தானை முளைப்பாட்டு

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 600 அளவு : 28×2½ செ.மீ. பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : முளைப் பாட்டு நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

அரிஓம் : நமோ நன்றாக
அனுதினமும் போற்றி செய்து
நெரியுடன் குருவாழ்க நித்தியமும் குருவே துணை
கரிமுகவன் பாதமதைக் கருத்தினிலே யான்மறவேன்
அரிமருகன் தன்மீதில் அன்புடனே யான்பாட

முடிவு :

மந்தை நல்ல கருப்பனனை மறவாமல் வாழி கதை
ஏழகாத்தாள் சன்னதிபோல் என்னாளும் வாழிகதை
முனியாண்டி சந்நிதிபோல் முக்கியமாய் வாழிகதை
வல்லடியான் சன்னதிபோல் யென்னாளும் வாழிகதை
வல்லகாற சுவாமி வயித்தானை பாட்டு

முற்றி

காலம் :

முகப் பேட்டில்
அச்சியா வருஷம் ஆனி மாதம் 22-ந் தேதி

குறிப்பு :

இது, நாட்டுப்புறப் பாடல் வகையைச் சாருவது. தலைப்பு முளைப்பாட்டு. முடிவு வயித்தாளை பாட்டு என்றுளது. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண் : 4595 சுவடி எண் : 1965-b

வல்லவன் சிந்து

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 20 அளவு : 28 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சிந்து

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவமயம் கடவுள் துணை
மாதுஉமை யேழை கரத்தால்
மலரடியை ம(ன)தில் நன்றாய்
சிந்தை தனில்யான் துதிக்க
செல்வம் மிக உண்டாக

முடிவு :

சொல்பிழைகள் பொருள் குற்றம்
துலங்குமிந்த அட்சரமும்
என்னபிழை யிருந்தாலும்
எல்லோரும் தான் பொறுத்து ....

குறிப்பு :

பிற செய்திகள் காணவில்லை. பிழைகள் மலிவு.

வரிசை எண் : 4596 சுவடி எண் : 1966

கந்தபுராணம்

ஏடுகள்: 380 கி. எண்ணிக்கை: 50000 அளவு: 39×4½ செ.மீ.

பக்கத்திற்கு: 15 வரிகள் ஆசிரியர் : கச்சியப்ப சிவாச்சாரியார் பொருள் புராணம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்
திருக்காந்த புராணம்
காப்பு

திகடச் சக்கரச் செம்முகமைந்துளான்.........போற்றுவாம்

நூல்

உற்பத்திக காண்டம்
கடவுள் வாழ்த்து

உச்சியின் மகுட மின்ன ஒளிர்தர நுதலி தென்ற
வச்சிர மருத தேற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவி கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியில் விகடச் சக்கர கணபதிக் கன்பு செய்வாம்.

முடிவு :

மூவிரு முகத்து வள்ளல் மொழிந்திடும் பணிக ளாற்றி
கோவிலின் மருங்கு மூன்றுங் குறுகிவீற் றிருந்த மன்னோ —253

ஆறிரு தடந்தோள்வாழ்க .... சீர் அடியார் எல்லாம் —259
வள்ளியம்மன் திருமணப்படல முற்றும். ஆக 2014
தெக்கண காண்டம் முற்றும். ஆக கண்டம் 6-க்கு திருவிருத்தம் 10243. திருச்சிற்றம்பலம்

காலம் :

தொடக்க ஏட்டில் :

சாலிவாகன சகாற்த்தம் 174-ன் மேல் செல்லா நின்ற கொல்லாம் 1003 பங்குனி மாதம் 15-ந் தேதி புந்தி வாரமும் பூருவ பட்சத்து ஏகாதெசியும் பூச நட்சேத்திரமும் பெற்ற சுப தினத்தில் ஆரம்பித்து எழுதி வருகிற கந்த புராணம் சுப்பிரமணிய பாதார விந்தமே கெதி. சொக்கலிங்கம் மீனாட்சியம்மாள் பாதமே துணை. திருவழுதீசுரர் ஆவுடையம்மாள் துணை. சம்பந்தப்பெருமாள் நாயனார் பாதமே துணை.

இறுதி ஏட்டில் :

1004-ஆம் வருஷம் தை மாதம் 1-ந் தேதி சோமவாரமும், பூறுவ பட்சத்து சத்தமியும் ரேபதி நட்சேத்திரமும் சாத்திக வேளையும் சுபயோக சுபகரணமும் பெற்ற சுபதினத்தில் செந்தில்ஆறுமுக முதலியாரவர்கள் புத்திரன் சங்கர நாராயணன் எழுதின கந்தபுராணம் முற்றியது.

பன்னிரு நயனத் தறுமுகத் தமிர்தின் சரணாவிந்தமே கெதி.
செந்திலாதியன் சரணமே கெதி. சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் துணை.

திருவழுதீசுரர் ஆவுடையம்மன் துணை. முதலிய மூவர் துணை.
அறுபத்து மூன்று நாயன்மார் பாதமே கெதி. மாணிக்கவாசக மூர்த்தி துணை.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 234–a/D-439 போன்றது. பிற செய்திகளை அங்கு காண்க.

வரிசை எண் : 4597 சுவடி எண் : 1967

ஸ்ரீ லோகஸ்வருபம் - உரையுடன்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 600 அளவு : 40 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்

நிலைமை : பழுது முழுமை : முற்றாற்றது எழுத்து : தமிழ் + கிரந்தம்.

தொடக்கம் :

புரந்தரரும் பூமிமேல் மாந்தர்களு மாங்கே
நிறந்தரம் வந்திறைஞ்ச நேரின்—வறந்தருநல்
வாம னடிவணங்கி மன்னுல கியல்பை
நாம வகையுரைப்ப தன்கு.

இதன் பொருள் : புறந்தாரும், தேவர்களும். பூமிமேல் மாந்தர்களும் பூமியில் இருக்கும் பௌவிய ஜநங்களு

முடிவு :

இதுகள் தன்தன் ருஜியாயிருக்கும். அப்பால் அசிங்கி-
யான சமுத்திரங்களும் கற்ம பாலாரும் அசங்கியாத்
தீபங்களு திரிய்க்கு போக பூமியாகு மென்றவாறு.
எட்டான் தீரம். நந்தீஸ்வர தீப மென்பது. —46

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1081/D-1785 போன்றது. அதில் மூலம் 72 பாடல்கள் உள்ளன. இதில் 46 பாடல்கள் உரையுடன் உள்ளன. கிரந்தம் கலந்து எழுதப் பட்டுளது. 2,21,32 ஆகிய ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 4598 சுவடி எண் : 1968

லோக சொரூபம் உரையுடன்

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 100 அளவு : 39×3 செ. மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: கிரந்தம்.

குறிப்பு :

இது, முன் பிரதி போன்றது எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. 43 பாடல்கள் உரையுடன் உள்ளன. சைன மதச் சுவடி

வரிசை எண் : 4599 சுவடி எண் : 1969

பாண்டவாளுடைய சரிதம்

ஏடுகள் : 86 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 42×4 செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: வேதாந்தம்-ஜைனம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : கிரந்தம்.

தொடக்கம் :

சுபமஸ்து

கௌதம பரமதேவர் சரோணிக மகாராஜனுக்கு
சொல்லுகுறார் :

ஜம்புத்வீபத்தில் பரத க்ஷேத்திரத்தில் குருஜாம்பல
தேசத்தில் அஸ்தி நாகபுரி பட்டணத்தில் அரச
வம்சத்தில் தலைவனாயிருக்கப்பட்ட சாந்தண மகாரரஜா

முடிவு :

சகாதேவன் நாதஸ்ரீயா யிருந்த பெண்த்ரௌபதை
என்றுப் கணயரஸ்வாமி சொல்லக்கேட்டு பாண்டவாள்
சரீரம் விட்டு மோட்சம் அடைந்தார்கள்.

ஸ்ரீமத் .... நம :

யெடுத்தவர் பார்த்துப் படித்து குடுக்க வேண்டியது.

சு மஸ்து

குறிப்பு :

இது, ஜைன மதச் சுவடி. பஞ்ச பாண்டவர்கள் சரித்திரம் கூறுவது.

வரிசை எண் : 4600 சுவடி எண் : 1970

திருக்குறள் — உரையுடன்

ஏடுகள் : 75 கி. எண்ணிக்கை : 4500 அளவு : 33×4 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள்: நீதிநூல்

நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்: நன்றாக குரு வாழ்க குருவே துணை.

திருவள்ளுவர் சுவாமி குறள்

அணுகைக் தொளைத்து.......... தரித்த குறள்
ஆயிரத்து முன்னூற்றி...........வீத்திருக்கலாம்
திருவாக்கும் செய்கருமம்...........தங்கை

முருகய்யர் துணையாகவும்

நூல்

அகர முதலவ வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. --என்பது உயிரெழுத்துப்
பன்னிரண்டுமே அகர முதலெழுத்தான முறமை போல

முடிவு :

எது, அசனம் செரித்தது பாத்து அசனம் பண்ணுகிறவன் நோயறுப்பான். நித்திய மொருபோது அசனம் பண்ணுகிறவனுக்கு வியாதியில்லை, யென்றவாறு. —950

குறிப்பு :

இதில், 950 குறட்பாக்கள் உரையுடன் உள்ளன. ஜைனர் உரைபோல காணப்படுகிறது.

வரிசை எண் : 4601 சுவடி எண் : 1971-a

நாகைக் கனகசபை நாத னுலா

ஏடுகள் : 57 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 25 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : உலா

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூதலத்த னாகை பொருந்தி யெனை யாளக்
காதலித்த னாகைக் கனகசபை — நாதனுலா
வக்கர மாதியணி யீரைத் தாக்குமுமை
பக்கனரு ளானை பதம்

நூல்.

பூமீது வீற்றிருக்கும் பொன்மார்ப னுங்கமலை
நாமீது வீற்றிருக்கு நான்முகனும் - பூமீது.

முடிவு :

சீரார் கனகசபை தேசிகன் நாகையிலே
யோரர் பவனிதொழு தேத்துவோர்—தீராத
பெத்தமல மூன்றின் பிணிப்ப மயலக
லத்துவித வின்பமநட வார்

கனகசபை நாத தேசிக னுலா முற்றும்
பொன்னம்பல தேசிகர் பாதமே துணை.

குறிப்பு :

இது, ஒரு ஆதீனத் தலைவர் மீது பாடப்பட்ட சைவசித்தாந்த தொடர்புடைய உலா சிற்றிலக்கியமாகும், தத்துவக் கருத்துக்கள் எளிய நடையில் உள்ளன.

வரிசை எண் : 4604 சுவடி எண் : 1971-b

சிவப்பிரகாசம் - உரையுடன்

ஏடுகள் : 127 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 25 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்

பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குருவே துணை திருச்சிற்றம்பலம் இறைவணக்கம்

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானைக் கழல்னாளு மறவாமல்
அளியாரு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே

முடிவு :

எ. து. இந்த வற்த்தத்தைக் கொள்ளவல்ல
முறைமையினை யுடையோர்க்கு முன்னோடுபின்
மலைவறச் சொல்லலா மென்றவாறு. — 100

சிவப்பிரகாச முற்றும்
திருச்சிற்றம்பலம்
ஆலவாய் ஞான தேசிகன் திருவடியே சரணம்
கனகசாபதிய்யர் பொன்னம்பல தேசிகன்
பாதசரணமே கெதி

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 54-e/D-691 சிவப்பிரகாச மூலம் போன்றது. இது உரையுடனுள்ளது. அச்சாகியுள்ள உரை தெளிவாக உள்ளது.

வரிசை எண் : 4603 சுவடி எண் : 1911-c

சித்தாந்தப் பஃறொடை

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 800 அளவு : 25×3 செ.மீ பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அம்பலவாண தேசிகர் பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவாரு நானத்தில் தத்தா னீற்றால்
மருவாரு மேனி வளத்தா—னொருவாத
கண்டிகை சென்னி களங்காது மார்புகரங்
கொண்டிலங்கு மேனிக் குயயுடையான்—மிண்டிலங்க

முடிவு :

குருவடியைப் போற்றிக் குலாவி மற்றொன்று
மருவறியே னென்ன மதித்தாள்.

வெண்பா

ஆகத் தறிவை ..... தேசிகனைப் பெற்று

காயத் துறாதவருட் கண்ணி யடியிணை யைத்
தேயத துடர்ந்தாண்ட தூதெவறா மாயத்தாற்
றுய்யா புன்சொல்லாய்த் தொடுத்தேன் புனைந்தாளென்
னையா நமச்சிவா யா. —2

சித்தாந்தப் பஃறொடை முற்றும்

கனகசபாபதிய்யர் பாதமே துணை. சந்திரசேகரய்யன்
சுவாமினாதய்யன் பொன்னம்பல தேசிகன் பாதார
விந்தமே துணை. சவுந்தரேசர் பாதமே துணை.

குறிப்பு :

இது, சைவ சித்தாந்த விளக்கம் கூறுவது.

வரிசை எண் : 4604 சுவடி எண்: 1971-d

குருதுதி

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 600 அளவு : 25×3 செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்,

தொடக்கம் :

சொல்லுவ தாருக் குலகம் பொய்யென்று
துறந்த பின்னு
மெல்லையி லாசை யிழுக்கு தைய்யா
யிவை நீக்கியினக்
கல்லும் பகலு மசையா துன்னடியாந்
திருக்குஞ்
செல்வந் தருதி கனக சபாபதித்
தேசிகனே.

முடிவு :

கப்பிலுயர் பேரின்ப மான குருவே மறைகள்
காணறிய ஞான குருவே காதல் கொளு
மடியவர்க்கெ ளியையாயறை மருவு
கனகசபை நாத குருவே ! —(30)

பொன்னம்பலமுண்டு பின்னை வினை யில்லை
கனகசபை னாயக குரு பாதமே துணை

குறிப்பு :

இது, துறவி கனகசபை தேசிகர் மீது பாடப்பட்டதாகும். குருவின் பெருமை உரைப்பது.

வரிசை எண் : 4605 சுவடி எண் : 1972-அ

திருவாசக அகவல்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு: 17 × 4 செ.மீ

பக்கத்திற்கு: 9 வரிகள் ஆசிரியர் : கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்

பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம் வரலாறு
நிலைமண்டில வாசிரியப்பா
திருவளர் பாண்டித் தென்னா டதனின்
மருமலர்ச் சோலைசூழ வாத வூரி
லாமாத் தியரெனு மந்தணர் குலத்திற்
காமாரி யென்னுங் கடவு டன்னை

முடிவு :

வரமிகு மாணிக்க வாசக வள்ளலார்
திருவாய் மலர்ந்தவித் திருவா சகத்தின்
பொருளினி தோர்ந்து புகல்வோர் சிவபுரத்
தருளுறு சிவனருள் அடைகுவ ரினிதே

திருச்சிற்றம்பலம்

இவ்வகவல் (கொட்டையூர் சிவக்) கொழுந்து தேசிகர்
செய்தது. ஸ்ரீகாந்திமதி சாலிவாஹசகஸ் (வரர்,
பாதார விந்) தமே கெதி

குறிப்பு :

திருவாசகத்தின் சிறப்பினை அகவற்பாவால் பாடிய ஆசிரியர், தஞ்சைப் பெருவுடையா ருலா, சரபேந்திர பூபால குறவஞ்சி முதலான நூல்களைச் செய்த சைவப் பெரும்புலவர். இதற்கு முன்னதாக 4 ஏடுகளின் பாடல் அட்டவணை உள்ளது.

வரிசை எண் : 4606 சுவடி எண் : 1972-b

திருவாசகம்

ஏடுகள் : 121 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 17 × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள் : சைவத் திருமுறை நிலைமை . மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம். திருவாசகம்
தொல்லை யிருப்பிறவி ... ... தேன்
சிவபுராணம்
நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள் வாழ்க

முடிவு :

னம்மையுமோர் பொருளாக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்த
வம்மையெனக் கருளியவா
றார்பெறுவா ரச்சோவே ! — 9

அச்சோப்பதிக முற்றும்
ஆகத்திருவிருத்தம் 657

காலம் :

1002-ஆம் வருஷம் அற்பசி மாதம் 20-ஆம் தேதி சுக்கிர வாரமும் ——— நச்சேத்திரமுங் கூடிய சுபதினத்தில் எழுதி முகிந்தது முற்றும்.

காந்திமதியம்மாள் துணை.

குறிப்பு :

இந்நூல் பனிரெண்டு திருமுறைகளுள் ஒன்று. அச்சாகியுளது.

வரிசை எண் : 4607 சுவடி எண் : 1973-a

நிலையாமை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 29×5 செ.மீ

பக்கத்திற்கு : 8-11 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்

நிலைமை: பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

சிவமயம்

நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

முடிவு :

ஆரா வியற்கை யவாநீப்பி னன்னிலையே
பேரா வியற்கை தரும்.

அவாவறுத்தல் முற்றும்

சிவமயம்

குறிப்பு:

இதில். திருக்குறளின் நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்கள் மட்டுமே உள்ளன.

துறவியர்கட்கு இன்றியமையதாகையால் சைவ குருமார்கள் இதனை அறிதல் மரபு.

வரிசை எண் : 4608 சுவடி எண் : 1973-b

விபூதித் தியானம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை: 25 அளவு: 29×3 செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் .

.... (மூன்று) முகந்தோறு முக்கண்ணு
மூன்றுகர மூன்று பதமுகையவின் முண்டகம் போல
வீரம் விதிறிசூலந் துடியபையங் காதில்
வெண்குழை

முடிவு :

ஆனாமிகையினாலும் பாந்தமற
நீற்றை யள்ளிப் பாலன் மிசை
தரித்தால் பஞ்சமா பாதகமும்
பாள்படும் பாள் படுமே.

குறிப்பு :

இதில், விபூதி மகத்துவம் கூறப்பட்டுளது.

வரிசை எண் : 4609 சுவடி எண் : 1973-c

சிவப்பிரகாசம்

ஏடுகள் : 31 கி எண்ணிக்கை : 1000 அளவு ; 29×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : கொற்றவன்குடி உமபாதி சிவாச்சாரியார்
பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஹரி: ஓம் நன்றாக குருவே துணை
ஒளியான திருமேனி .... நினையாவே
நூல்
ஓங்கொளியா யருள் ஞான
× × × × ×
போற்றல் செய்வாம்

முடிவு

திருவருள் கொடுத்து × × × சாற்றலாமே.
பெருநூற் பொருளை பின்முன் மலைவற
வருளுடன் கொள்பவர்க் கறைந்த நூலென்றது — 50

உண்மை முற்றும், சிவப்பிரகாசம் பொது சூத்திரம் — 50

உண்மை சூத்திரம் - 50 ஆக வகை - 2 க்கும் சூத்திரம் - 100
சிவப்பிரகாச முற்றும் அழகிய கூத்தகுரு பாதமே கெதி
சிவமயம் சங்கரேசர் துணை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 54-e/D-692 போன்றது இதன்பின், ''எம்பட்டம் பட்ட முடையானை' எனத் தொடங்கும் பாடலொன்றுளது.

வரிசை எண் : 4610 சுவடி எண் : 1973-d

கந்தரனுபூதி

ஏடுகள் : 4 கி எண்ணிக்கை : 200 அளவு : 29×3 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை: பழுது முழுமை: முற்றுமானது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

விருப்பூரந் தும்பர்கு மென கனியுந் துயக்குங்
கருப்பூரந் தின்று கமழும் – பொரும்பூர
குணவாள சேற்றுப்பசுங் குன்றிற் குறத்தி
மணவாளரைத் துதித்த வாய்.

நூல்

ஆடும் பரிவே லணிசேவ லெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்

முடிவு :

தூசா மணியுந் துகிலும் புனைவாய்
நேசா முருகா நினதன் பருள்வா
லாசானு நிகளந் துகளானது பின்
பேசா வனுபூதி பிறந்ததுவே. —51

கந்தரனுபூதி முற்றும்

குமர குருபர முருக மயில் வாகனக் கடவுள்
கூரிய வைவேல் மறவேனே.
வேலு மயிலும் சகாயம். குருவே துணை.

குறிப்பு :

முதற்பாடல் அச்சுப் பிரதியில் காண்டல் அரிது. இது எமது சுவடி எண் 389-a/D-906 போன்றது.

வரிசை எண் : 4611 சுவடி எண் : 1973-e

சிவஞான போதம் — உரையுடன்

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 800 அளவு : 29×3 செ.மீ.

குறிப்பு :

இதில், குழந்தைகட்கு முதல் மாதம் முதல் 12 ஆண்டுகள் வரை வரும் நோய்கள் குறித்துக் கூறப்பட்டுளது

வரிசை எண் : 3862 சுவடி எண் : 2048-b

சருவபால் கிரக சாந்திகள்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 24×3 செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சாந்து சந்தனம் சிகப்பு
தாம்பூலம் தூபம் தீபம்
காதோலை கரியமணி
பரிமனம் பழம் தேங்கா

முடிவு :

கலியாண பூசனிக்காய்
நாக பெலியாம் எலிமிச்சம் பழம்
ஆடு பலி ஊமத்தங்காய்
எருமை தும்மடிக்காய் சறப்பலி

குறிப்பு :

இது, குழந்தைகளுக்கான சாந்தி கூறுகிறது.

வரிசை எண் : 3863 சுவடி எண் : 2049-a

கந்தரனுபூமி

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 250 அளவு : 16×3 செ.மீ

பக்கத்திற்கு: 4 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை: நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கணபதி துணை.
கந்தரனுபூதி காப்பு—

நெஞ்சக் களகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல் சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம்பணிவாம்.

முடிவு :

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே! —51.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 882-c/D-1156 போன்றது. அச்சானது.

வரிசை எண் : 3864 சுவடி எண் : 2049-b

சிவசண்முகர் சொரூப அகவல்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 50 அளவு : 16×3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

முருகக் கடவுள் துணை
ஓம் சிவசிவ சண்முகாயா
ஓம் சிவசிவ சண்முகாயா
ஓம் சிவசிவ சண்முகாயா
மூவிரு முடியும் மூவிரு முகமும்
ஆறிரு காதும் ஆறிரு குழையும்

முடிவு :

முத்தா சரணம் மூர்த்தி சரணம்
கர்த்தா சரணம் கருணாசரணம்
சரணஞ் சரணம் நின் றாளே சரணம்
முற்றும்

குறிப்பு :

இது, மூல சுவடி எண் 2047-b போன்றது.

வரிசை எண் : 3865 சுவடி எண் : 2050

கந்தவாசகம்

ஏடுகள் : 392 கி. எண்ணிக்கை : 28000 அளவு : 36×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் ; புராணம்
நிலைமை : மிகப் பழுது முழுமை ; முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவே துணை
உச்சியின் மகுடமின்ன வொழிதா துதவி னோட
வச்சிர மருப்பி நொற்றை மணிகள் கிம் புரிவயங்க
மெய்ச் செவி கவரிதூங்க வேழமா முகங்கண்டுத்த
கட்சியில் விகட சகிர கணபதி காப்பு செய்வாம். —1

முடிவு :

வாழ்க யன்னாள்ப் பொய்யில்சீ ரடிகள் வாழ்க
வாழ்கயிப் புவன மெல்லாம். —738

கந்த தேவர் புபடலம் முன்வளந்தது முற்றும்.
குமரகுருபரமுடுக சரவணைத்த மார்ப பயங்கர
னாறுமுக வேலாயுதக்கடவுள் நாயகர் பாதாரவிந்தமே கெதி.
திருச்செந்திலாதிபன் திருவடிகளே சரணம்.

காலம்:

1411-ஆம் வருஷம் சித்திரை மாதம் 16-ந் தேதி சுக்கிரவாரம்———— சுபதினத்தில் கந்த வாசகமெழுதினது வெள்ளலை அருணாசல பிளளையவர்கள் குமாரன் கோதண்டராம பிள்ளையவர்கள் குமாரன் கோதண்டராமபிள்ளை யெழுதினது. நிடூழிகாலம்வாழ்க.

குறிப்பு :

இதில், காஞ்சிமாநகர்ப் படலம், நேமிசாரணியப்படலம், நெய்மிசாரணிய முனிவர்களுக்கு சூதமுனி சொல்லுகிற பிரகாரம், கைலையங்கிரிபடலம், பரமேசுபரி மலையரசனுக்குக் குழந்தையாகிய படலம், சனகர், சனக்குமாரர் ஞானநிலை கேள்விப்படலம் ஈசுபரன் ஞானமாகியகதை, மன்மதன் போர்புரிபடலம், மன்மதன் எரிந்த படலம். பிரமா முதலாகிய தேவர்கள் தோத்திரஞ் செய்த படலம், மோன நீங்கு படலம், பரமேசுபரி தபசுகாணபடலம், மலையரசனிடம் மணம் பேசுதல், மலையரசன் பட்டணம் அலங்கிருதப்படலம் முதலான பல படலங்கள் உள்ளன

வரிசை எண் : 3866 சுவடி எண் : 2051

மகாபாரதம்-அம்மானை

ஏடுகள் : 500 கி. எண்ணிக்கை : 20000 அளவு : 40 × 3½ செ.மீ

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : வல்லபநாட்டு கிருஷ்ணன் பொருள்: இதிகாசம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

நீடாழி யுலகத்தில் மறைநாலோ டைந்தினால் நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மகாபாரதஞ் சொன்னனான்
யேடாக மகாமேரு வெற்பாக வெங்கூற் யெழுத்தாணிதங்
கோடாக யெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூற்வாமரோ!

நூல்

மேதினியில் முன்னாள் விநாயகனார்தம் எழுது
பாரதத்தை நூல் வழியே பாடவே

முடிவு :

மன்னவர் வந்தார்கள் வந்தவரை அஞ்சலென
ஆதி சிவனிடத்தில் அரிச்சுனனைச் சென்று புக.
(எடு ஒடிந்துளது)

காலம்:

(தொடக்கத்தில்) 1040-ஆம் வருஷம் வைகாசி மாதம் 11-ந்தேதி எழுதி வருகிறது.

குறிப்பு :

இது, அம்மானை வடிவில் பாடப்பட்டது. இது, எமது சுவடி எண் 59/D-621 பான்றது. பாடல்கள் மாறுபடுகின்றன. ஏடுகள் தலைதடுமாற்றம்.

வரிசை எண் : 3067 சுவடி எண் : 2052

விபீஷணன் புத்தி

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 500 அளவு : 53 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : தேரழுந்தூரான் பொருள் : கதை
நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவே துணை.

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீட துயர் வெனியதாகும் வேதியன் கமல முங்கும்
நீடுவாளரக்கர் சேனை நீடுபட்டடோழிய வாள்கை
சூடிய சிலையில்ராமன் தோள்வலி கூறுவோர்க்கே

முடிவு :

ராவணன் தன்னை விட்டு ரெகுநாயகன் பாதம் கண்டு
பூவணை கமலத்தோனை போற்றியே தெண்டனிட்டு
காவணை மணித்து வந்த கருணைசேர் குறங்கை யன்று
சேவகத் திரங்கள் செப்பித் திருவருள் போற்றி நின்றான்! —100

காலம் :

1105 பங்குனி மாதம் 6-ந் தேதி ரா மாயாண்டி வாசித்து வருகி விபீஷணன் புத்தி பாடம்.

1106-ஆம் வருஷம் அற்ப்பிசி மாதம் 10-ந் தேதியன்று
விநாயகற்றிக் ———— ரா. மாயாண்டி வாசித்து வருகிற
விபீஷண புத்தி ——— முற்றுப் பெற்றது.
நீடூழி வாழ்க சுபம்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 123/D-590 போன்றது.
பாடவேடாடுகள் மிகுதி

வரிசை எண் : 3868 சுவடி எண் : 2053

விபீஷணன் புத்தி

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 500 அளவு : 40×3 செ.மீ
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : தேரழுந்தூரன் பொருள் : கதை
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

குறிப்பு :

இது, முன்பிரதி போன்றது கருத்தாமுப்பன் மகன ஆண்டிமுப்பன் சுவடி என்றுளது.

வரிசை எண் : 3869 சுவடி எண் : 2054

குற்றாலக் குறவஞ்சி

ஏடுகள்: 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 34×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : திரிகூடராசப்பக்கவிராயர் பொருள் : குறவஞ்சி நிலைமை : நல்லநலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

ஹரி : ஓம்

குருவிக் குலங்களிசை பாடக் கொம்பில் மந்தி கொக்கரிக்க
அருவித் தடாகஞ் சூழ்ந்திருக்கும் அம்மே குழல்வாய் மொழித்தாயே

நூல்

பூமலி யிதழி மாலைப் புனைந்தகுற் றாலத்தீசர்
கோமலர்ப் பாதம் போற்றிக் குறவஞ்சித் தமிழைப் பாட
மாமதத் தருவி பாயும் மலையென வளர்ந்த மேனி
காமதத் தருவி போலைந்து கைவலான் காவல் தானே!

முடிவு :

கொடியே மதுரம் பழுத்தொழுகுங் கொம்பே
வம்பு பொருதமலை
பிடியே யெமது குடிக்கொரு பெண்பிள்ளாய்க்
கருத்தை விள்ளாயே! —26

குறிப்பு :

இது, அச்சாகியுளது.

வசரிசை எண் : 3870 சுவடி எண் : 2055-a

கொன்றை வேந்தன் (ஆத்திசூடி)

ஏடுகள் 3 கி. எண்ணிக்கை : 80 அளவு : 42×3 செ.மீ
பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள்: நீதிநூல்
நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக

கொன்றை வேந்தன் செல்வனடி யிணை யென்றும்
மேத்தித் தொழுவோ மாவே.

நூல்

அரன் செயல் விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்.

முடிவு :

வைக(றை)ற துயிலெழு
வொன்னாற் தேறேல்
வெரன்று வளைபோல்
ஔவையா ரருளிச் செய்த
கொன்றை வேந்தன் முற்றிற்று. முற்றும்
நரசிங்க மூர்த்தி துணை.

காலம் :

ஆண்டி செட்டிமார் வாசித்து வருகிற கொன்றை வேந்தன் சுவடி.

குறிப்பு :

இது அச்சாகியுளது, ஆனால் தலைப்பு தலைதடுமாறியுளது அடுத்துவரும் கொன்றைவேந்தனுக்கு ஆத்தி சூடி என்று பெயர் தரப்பட்டுளது. இரட்டை ஏடுகளில் எழுதப்பட்டுளது பாடவேறு பாடு சிறந்ததாக உளது. 'அறஞ்செய விரும்பு' என்பது அறன் செயல் விரும்பு' என்றுளது சிறப்பு.

சுவடி எண் : 3871 சுவடி எண் : 2(5 -b

ஆத்திசூடி (கொன்றை வேந்தன்)

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 42× செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : நீதிநூல்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவே துணை.
ஆறே சூடி நீறே பூசி
ஏறே ஏறி யீசனைக் கூற கூறாய்
னாவே குறையில்லை நமக்கு
ஆத்தி சூடி யமந்த தேவனை
ஏத்தியேத்தித் தொழுவோம் நாவே! —ஆண்டி சுவடி.
நூல்
அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்.
ஆலயந் தொழுவது சாலக நன்று.

முடிவு :

வையகந் தோறுந் தெய்வந் தொழு
வொற்ற இடத்தில் நித்திரை செய்
வோதாதா ருவனைப் பாரா திரு
வௌவையா ரருளிச் செய்த
அன்னையும் பிதாவும் முற்றும்
நரசிங்க மூற்றி துணை

குறிப்பு :

இதுவும், தலைப்பு தலைதடுமாற்றம் அச்சாகியுளது.
முன்னது ஆத்திசூடி, இரட்டை ஏடுகள் பாடவேறுபாடு நன்றாக உளது.

வரிசை எண் 3872 சுவடி எண்: 2055-C

வேழமுகம்

ஏடுகள் : 1½ கி. எண்ணிக்கை : 40 அளவு : 42×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : சைவத்
தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவே துணை
வேளை முகத்து வினாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வித்தை மிகுத்த விநாயகனைத் தொழ
புத்தி மிகுத்து வரும், (ஆண்டி வாசித்து வருகிற வேளை முகம்
சுவடி , ஸ்ரீராம செயம்)

நூல்

சிந்தித் தொழுவது கணபதி செயசெய
சீரிய வானைக் கன்றே செயசெய

முடிவு :

ஏஎம்மதை யானை முகத்தாய் செயசெய
நன்னறி விக்கின விநாயகா செயசெய
எந்தோ டாகிலும் பிள்ளையார் செயசெய
பிள்ளையார் தோத்திரம்
முற்றும்.

குறிப்பு :

இது, பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது முற்காலத்தில் சுவடி தூக்கும் வழக்கமிருந்த போது பாடப்படுவது.

இரட்டை ஏடுகள். பாடவேறு பாடு நன்றாக உளது.

வரிசை எண் : 3873 சுவடி எண் : 2055-d

சரசுபதி தோத்திரம்

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 42×3 செ.மீ
பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : சைவத் தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பொத்தகத் துள்ளுறை மாதே
பூவி லுகத்திரு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி

முடிவு :

ஓடாதே ஒளியாதே ஒருநாளும் பொய் சொல்லாதே
இட்டதே சோறும் பட்டதே கறியும்
உண்டு உறங்கி வெள்ளி உதிக்குமுன் பள்ளிக்குவா
வேளைமுகம் முற்றும்.
நரசிங்கமூர்த்தி துணை

குறிப்பு :

இது, அக்காலப் பள்ளிப் பிள்ளைகளின் அன்றாட நடப்பு குறிப்பது. இரட்டை ஏடுகள்-பாடவேறுபாடு நன்றாக உளது.

வரிசை எண் : 3874 சுவடி எண் : 2055-e

உலக நீதி

ஏடுகள் 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 42×3 செ.மீ

பக்கத்திற்கு: 4 வரிகள் ஆசிரியர்: உலகநாதன் பொருள் : நீதிநூல்

நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவே துணை
உலகு நீதிப் புராணம் உண்மையா வுரைத்திட
கலகல் லாய்ந்திட கணபதி காப்பு.
ஆண்டி வாசித்து வருகிற உலகுநீதிப் புணம் ஸ்ரீராமசெயம்
நூல்
ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாப்பு சொல்ல வேண்டாம்

முடிவு :

காதலுற்றுப் புவிதன்னில் கற்றோர் கேட்டோர்
கனபவுசும் புத்திரனும் சம்பத் துண்டாம்
பூதலத்தில் மிக வாழ்வும் பொருளுமுண்டாம்
பூலோக முள்ளளவு மிருப்பர் தாமே! —22.
முற்றும்.

குறிப்பு :

பிழைகள் மலிந்துள்ளன. இரட்டை ஏடுகள். இது எமது சுவடி எண் 859/D-1107 போன்றது.

வரிசை எண் : 3875 சுவடி எண்: 2056-A-a

சித்திரபுத்திர நயினார் கதை

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 2300 அளவு : 38×3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கதை

நிலைமை : மிகமிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து; தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம். நன்றாக குருவேதுணை. ஸ்ரீ ராம செயம்
விநாயகர் துதி
வேகமா னெரிசேரும் வினைகளுந் தாக
× × × × × போற்றுவாம்.
நூல்
சீர்கொண்ட பூதலத்திற் சித்திரபுத் திரர்கதையைப்
பார்கொண்ட செந்தமிழால் பாடவே – ஏர்கொண்ட
வார்பூத்த கோலமுலை மாதுமையாளீன்றெடுத்த
கார் பூத்த குஞ்சரமே காப்பு.

முடிவு :

வாசநால் வேதம் வாழி மறையவர் மறைகள் வாழி
பாசமா யின்னூல் வாழி பாரெலாம் வாழி தானே !
பஞ்சபூ தங்கள் வாழி பகர் சித்திரபுத்திரர் வாழி
குஞ்சர மெட்டும் வாழி குவயம் முழுதும் வாழி
செஞ்சொலால் நிறைந்த சித்திர புத்திரர் கதையை யன்பாய்
இஞ்சொலால் படித்தோர் கேட்டோர் யாவரும் வாழிதானே!
குருதேசிகன் பாதாரவிந்தமே கெதி, சகல தர்ம தெய்வங்களும்
ரட்சிக்கச் சிவமயம், நீடூழி காலம்வாழ்க
வடக்குவாச செல்லியம்மாள் துணை,

குறிப்பு :

இது, அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை, எமது சுவடி எண் 1408/D-2039 போன்றது, இதில் சித்திர புத்திரர், பிறப்பு, வளர்ப்பு பணி, தேவலோகத்தில் இயமனின் கணக்கராயிருந்து, உயிர்கள் செய்தபாவ புண்ணியங்களை அவரிடம்எடுத்துக் கூறுவது, இயமன் அதற்குத்தக்க தண்டனை, மோட்சம் முதலானவைகளை அருளுதல் முதலியன கூறப்பட்டுள்ளன,

வரிசை எண் : 3876 சுவடி எண் : 2056-A-1

செட்டிச்சியம்மாள்கதை

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 400 அளவு: 38×3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கதை

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவே துணை.
சீர்விளங்கும் பூவுலகில் செட்டிச்சி யென்றோ(ர்) பெண்
சிந்தை கூர்ந்து
பார்விளங்க அறங்கள் செய்யும்
பலன்க ளதனையுரைப்பதற்குப் பற்ம விபாலன்
× × × × × காப்புத் தானே,
பாசமய கோளரிநாத சுவாமியன் பாதார விந்தமே கெதி

முடிவு:

நாவலர் வாழி இந்த நற்கதை படித்தோர் கேட்டோர்
பாவதற மெழுதி வைத்தோர் பாரெலாம் வாழிதானே!
செட்டிச்சியம்மாள் கதை முற்றிற்று, சிவமயம்
குருதேசிகள் முன்னிற்க நீடூழி வாழ்கத் தேவி சகாயம்

காலம் :

ராமலிங்கத் தேவன் மகன லெட்சுமண்த் தேவன்
செட்டிச்சி கதை 1611-ஆம் வருஷம் பங்குனிமாதம்
எழுதி முகிந்தது, நன்றாக.

குறிப்பு :

இது, அம்மானை வனப்பில் கூறப்பட்டுளது. செட்டிச்சியம்மாள் என்னும் பெண் செய்த தருமங்களைக் கூறுவது.

வரிசை எண் : 3877 சுவடி எண் : 2056–B

எண் சுவடி

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 450 அளவு : $43 \times 2\frac{1}{2}$ செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூட வில்லை பொருள் : கணித

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

குறிப்பு

இது, வெறும் எண்களாகவே உள்ளன,

வரிசை எண் : 3878 சுவடி எண் : 2057

(அரிச்சந்திர நாடகம்)

ஏடுகள் : 72 கி. எண்ணிக்கை : 2300 அளவு : $42 \times 2\frac{1}{2}$ செ மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நாடகம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்

தமிழ்.

தொடக்கம்:

வச்சிரகிட்டியும் ஒத்த
மகர குண்டலங்களாட
விச்சித்திர ... ... — ... பூண்டு ரத்தினம் போலே
... ...
சித்திரப் பதுமைச் சந்திர மதியுமே
வருகிறாளே !

முடிவு :

தரு

பதர பதர் பாவி விருத்தனோ என்மகனை
கதரக் கதரக் காலன் கடித்த ... ... வாதனைமுங்
குளுந்துதோ என்மகனே நீயும் தரையிலுருள வன

குறிப்பு :

உதிரி ஏடுகளாக உள்ளன. தொடக்கம் 34 ஏடுகள் இல்லை. தலைப்பு இல்லை. உள்தலைப்புகளாக, கங்காஸ் நானம் செய்யுமிடம், விசுவாமித்திரர் வருகை ஆகிய - தலைப்புகள் உள்ளன, நாடக பாணியில் உள்ளது

வரிசை எண் : 3879 சுவடி எண் : 205

அருணகிரிப்புராணம்-உரையுடன்

ஏடுகள் : 120 கி. எண்ணிக்கை : 7000 அளவு : 40×3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : சைவ எல்லப்ப நாவலர் பொருள் : புராணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக

மிக்க வேத வியாசர் விளம்பிய

× × × × ×

கைக்களிற்றினை கை தொழு தேத்துவாம்.

(எ.து) மிகுதியான தபசுடைய வேத வியாசரிஷி

முடிவு :

... ... உள்ப்பிளப் ... ...பிடித்து விந்தது

போலும் அந்தகாரமான யிறு ——————

குறிப்பு :

இது, பயனற்ற நிலையில் உள்ளது. எமதுசுவடி எண் 981/D—1190 போன்றது

வரிசை எண் : 3880 சுவடி எண் : 2059-a

தண்டலையார் சதகம்

ஏடுகள்: 42 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 38 × 3 செ.மீ.

பக்கத்திற்கு: 4 வரிகள் ஆசிரியர் : படிக்காசுப் புலவர் பொருள் : சதகம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

புல்லறிவுக் கெட்டாததண்டலையார் பொன்னி
வளஞ் செழித்த நாட்டில்
சொல்லற மாதவம் புரிந்து சவுபரியுந் துறவார்த்தை
துறந்து மீண்டான்
நல்லறிவர் வள்ளுவர் போல்க் குடிவாழ்க்கை
மனவியுடன் உத்தி னின்றால்
யில்லறமே யழகாகும் துறவறமே பழிப் பென்ப
தியற்கை யாமே, —7

முடிவு :

... ... ட்டிகளப்பன்னி ப .. ந்தே திரியும்
வாத்த மெல்லாம்
... ... ன்னிடத்திறுக்கு நெயிலே தடிகக்
கொண்டலையும் மேன்மை தாளே ! —64

குறிப்பு :

இதில், வேறு செய்யுட்களும் கலந்திருப்பதாகத் தெரிகிறது, முதல் 3 ஏடுகள் இல்லை,

வரிசை எண் : 3881

சுவடி எண் : 2059-b

ஆஸ்தான கோலாகலம்

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 500 அளவு : 38×3 செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நீதிநூல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

அஸ்தான கோலாகல நீதி ஆய்ந்துரைக்க
மாயத்தானே அம்பலத்தில் வாசமாய்க்
கூத்தானுஞ் சத்திசிவகாமி சவுந்தரியாள் பயின்றெடுத்த
அத்திமுகன் யெந்தமிழ்க் காப்புத் தானே?

முடிவு :

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று
வைக்கும் உறவு ... ...

காலம் :

பறபா வருஷம் ஆவணி மாதம் 17-ந்தேதி பூசாரி கொழந்தை கவுண்டன் குமரான் சின்னப்பன் அஸ்த்தாத்திரம் தூக்கினது. குருபாதம் துணையாகவேணும்

குறிப்பு :

நீதிகளைக் கூறுகிறது. இதிலும் பிற ஏடுகள் கலந்துள்ளன. ஏடுகள் தலை தடுமாற்றம். வரிசையாக இல்லை. பக்க எண் பழுது.

வரிசை எண் : 3882

சுவடி எண் : 2060

கணக்கதிகாரம்

ஏடுகள் : 66 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 34×3 செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : காரிநாயனார் பொருள் : கணிதம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இககணக்கி லொன்று யிடையூறு வாராமல்
பொக்கணவன் பெற்ற பொருகளிறே — இக்கணக்கி
நேரே விளங்கி நிகரன்றி நிற்கும்வண்ணம்
பாரே விளங்குமென் பார்.

முடிவு:

சூள்விரலை யுண்ணல் காலூன்றலரை
யுன்னி முருக்கன் — — — —
விதல் மாத்திரையாம் பேசு. —50

வெண்பா

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 678 D-124 போன்றது.
அதை விட அதிகமான செய்யுட்கள் இதில் காணப்படுகின்றன.

இதில், நிலவிலக்கை, பொன்னின் விக்கை, வாரகன் ஐந்தொகை, வராகன் விலை, ஐந்தொகை, பொன்வழிச் சூத்திரம், மெழுகுபதம், ஆணிக்கோர்வை அகவல் முத்துவினம், மேல்தல்தானப், புறச்சூத்திரம், பணவிடை வருமாறு முதலான பல உள் தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3883: சுவடி எண் : 2061

அட்டாங்கயோகம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35½ × 4 செ.மீ
பக்கத்திற்கு: 12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : சிறிது பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம்

பெரியாரைச் சார்தல்

ஞானியை நிந்திப்பவருநல் கன்னகரை
ஞானியை வந்திப்பவனுமே நல்வினையான்
கொடுவினை தீரரவா மயம்போன பொழுதே
யுருஞ்சிவ போகமே

பரனாய பராபரனாகிப் பார் சென்று
பரனாய கணக்கற்ற வொண்சுடர் தானாய்த்
தனதென வாற்றியே வொண்ணா வானாளல் கில்லா
னாள்புரிந்தானே.

இது, எமது சுவடி எண் 54-x/D-7 11-ன் வேறாயது இதில், பெரியானரச்சார்தல் அட்டாங்கம், ஞானவுதையம், சத்திஞானநாதம், சூரியசம்பாஷணம், அடியார்பெருமை மயேச்சுர விந்தை, பொறையுடைமை, சிவதெரிசனம், ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3884 சுவடி எண் : 2062

வைத்தியத்திரட்டு

ஏடுகள் : 94 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 28×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர்: பலர் பொருள் : மருத்துவ.

நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மூறிவாழப் பிள்ளிமுட முடக்கை
முன்வளைச்சல் சீறியவான் கற்மம்
செப்பிய வாறிவிறல் மூணும்வரி
முடித்தல் முன்னின்றும்

முடிவு :

நாட்டிலே யிப்படிதான் வெட்ட ... ... ரியாக
நாட்டியுந்தான் அறியாட்டா யென்ன
செய்வோம் பா'

குறிப்பு :

இது, உதிரி ஏடுகளாக உள்ளன. மந்திரங்கள் உள்ளன, ஏடுகள் தலைதடுமாற்றம் விநோதம், கண்கட்ட ஆமணக்குகற்பம், கள்ளிக்கற்பம், குத்துயிருமலுக்கு மருந்து தான்திறக்க மந்திரம், ஒட்டி குண்ணுக்கு மருந்து, அசீரண வடகம், குமாரதியானம் முதலான பல மருத்துவங்களும், சக்கரங்களும் உள்ளன.

வரிசை எண் : 3885 சுவடி எண்: 2063-a

அண்டகோசப்படலம்

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 350 அளவு : 28×2½செ.மீ,
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் :
தத்துவநூல் நிலைமை : சிறிதுபழுது முழுமை : முற்றுமுளது எழுத்து
தமிழ்

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக
தீயதோ ரினிய மாற்றஞ் செப்பலு மிதுநன் றெந்தை
யெயின்பணியி னிற்ப னிறையவனேனக்குத் தந்த
வாயிரத் தெட்டொன் றோது மண்டங்களிலைமை
யாவுநீ வுரையென வாசா னிருபனுக் குரைக்கலுற்றான்

முடிவு :

மைந்தனீ சென்று காணுதியென வகுத்துரைப்ப
வந்தமில் லமதரா மகிட்சியிலுணர்ந்தனன்வுணன் —67.
அண்டகோசப்படல முற்றும்.

குறிப்பு :

இது, அண்டங்களின் தோற்றம் கூறுகிறது.
என்ன புராணத்தைச்சார்ந்தது என்று அறியக்கூடவில்லை,

வரிசை எண் : 3886 சுவடி எண் : 2063-b

வச்சிர பஞ்ச கவசம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×2½ செ.மீ
பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர்; அறியக்கூடவில்லை பொருள்:
தத்துவநூல் நிலைமை: சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து :தமிழ்

தொடக்கம் :

அங்கையிற் காகந் தாங்கு பிரமாணி யருளினோடுங்
துங்கமென் சென்னி கார்க்க வயினவிதுகளிலாக
மெங்கனுங் கார்க்கச் செய்ய வேந்தெழிலுத்தி ராணி —1.
தங்குமெண்டிசையு மன்பு தழைத்திட வினிது கார்க்க

முடிவு :

இனையநற் கவசந் தன்னை யாரெடுத்தியம்பு கின்றா
ரனையவர் தமையென் னோடுஞ் சத்திக ளளிக்கு மென்னாப்
புனையிழை யமரர் வேட்ட நல்வர மளித்துப் பொங்கு
கனையிருட் பிழம்பு சீய்க்குந் தன்னுழைக் கரந்து போனாள்.
வச்சி பஞ்ச கவசம் முற்றும் —17.

குறிப்பு :

இது, கவச வகையைச் பார்ந்தது. அறுசீர் விருத்தமாகப் பாடப்பட்டுளது

வரிசை எண் : 3887 சுவடி எண் : 2063-c

தேவாரம்

ஏடுகள்: 152 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 28×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : சம்பந்தர், அப்பர் பொருள் :
திருமுறை நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

... ... துள்ளங்கவர் கள்வன்
கடல் முழங்கு கழிசூழ் குளிர் கானலம்
பொன்னஞ் சிற கன்னம்
—டமுயங்கு பிர மாபுர மேவிய பெம்மானிவனன்றே! —

முடிவு:

ஒழுகலரித — — — யினுழியுலகு பழிபெருகுமய — — ழியை நினை
முழுதுடலி லெழுமயிமடழுவு, முனி
குழுவினொடுகை — — — யேனைத்
தொழுதுலகிலிழுகு மலமழியும் வகை
கழுவுமுரை கழுமலநகர் பழுதிலிறை யெழுதுமொ — — —

குறிப்பு :

தொடக்க ஏடுஇல்லை. ஞானசம்பந்தரின், கோளறுபதிகம், நல்லூர்ப்பெருமணம் முதலான பல தலப்பதிகங்கள் பண்களுடன் உள்ளன. நாவுக்கரசரின் பூம்புகலூர்ப்பதிகம் சுந்தரின் திருவாரூந்தர், (செந்துருத்திப்பண்) பதிகம், முதலான பதிகங்களும் பண்களுடன் உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை முரிந்தும் உள்ளன.

வரிசை எண் : 3888 சுவடி எண் : 2064

ஆத்திசூடி வெண்பா

ஏடுகள் : 55 கி. எண்ணிக்கை : 500 அளவு : 25×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : இராமபாரதி பொருள் : நீதிநூல்
நிலைமை : செல்லரித்த நிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

அத்தி முகவனே நித்தம் துதிசெய்ய
சித்தம் மகிழ்ந்துதான் முத்தி பெறுவரே!
ஆறுமுகவனே — — — யேறு பெறுவரே

நூல்

ஆத்தி சூடிச் செல்வ — — — நத்தனை
யேத்தியே வெண்பா நினைந்தோத —மூத்துலிகில்
முந்திவருந்திமுக முந்திவலை யோங்குமத
மந்த — — — தந்துணை வரும்.

முடிவு :

வெங்கடரங்க — — — விளம்பின தத்திச்சூடி
யாங்கவி வெண்பாநூத் தெட்டாம் —109

குறிப்பு :

இது, மிகவும் செல்லரித்திருப்பதால் வெண்பா முழுமையாக்க இயலவில்லை. இதில் 108 வெண்பாக்களும் தொகைச் செய்யுள் ஒன்றும் ஆக 109 வெண்பாக்கள் உள்ளன,

வரிசை எண் : 3889 சுவடி எண் : 2065

விபூதி உற்பவம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 120 அளவு : 27½ x 3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் ; சைவ தோத்திரம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

யீசனும் பிரம்மா விஷ்ணு யிபையவர் முனிவர் தேவா
ஓசையு முலகம் யாவு முற்றநற் பகுதி சந்திரன்
வாசமா மலைக ளெட்டும் வளர்ந்திடு மாமுஞ் சேர்ந்து
பாசமா யுதிக்கு முன்னே பராபரை யிருந்தா ளன்றே! — 1

முடிவு :

வுன்னுட மகிமை யாலே உற்றநல் விபூதியாச்சு
கன்னியே நீயும் நானும் காசினியுலகீரேழும்
நன்னய மாக தேவர் நலம்பெறு முனிவர் யாவும்
வன்னமாய் பிரித்து நன்றாய் வகையுடன் படைப்போ மொன்றார்

குறிப்பு :

இதில், விபூதி உற்பத்தியான வரலாறு கூறப்படுகிறது.
ஈசன் உண்மையை எரித்தாகக் கூறப்படுகிறது.

வரிசை எண் : 3890

சுவடி எண்: 2066-a

கூவபுராணம்

ஏடுகள் : 132 கி. எண்ணிக்கை : 2600 அளவு : 20×2 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

பொருள் : தலபுராணம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்

தொடக்கம்:

.... மற்றி நிகர்த்தமை யன்றி
பழஞ்ஞை ....
பெற்ற மழகளிற்றை மனச் செயகத்தின்று
———————நான்கு முகன்றொழு மைந்து
முகனீறை வாறு ——————

முடிவு :

பொய்யின் மறை புகழ் திருவிற்கோல நாயகர் புகழும்
× × × × × திகழுமன் பால் —291
வாழ்க நல்லற மன்னிய வுலகெலாம்
வாழ்க பையர வல்குல் மகிணர் ———
வாழ்க கூவபுரத்துறை மாந்தர்கள்
வாழ்க கூவபுராண மருவியே! — 295

காலம் :

ஆகவிருத்தம் 701. காப்பு உள்பட திருவிருத்தம் 70 ——— சோபகிருது வருடம் அத்ப்பசி மாதம் 4-ந்தேதி சோமவாரமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் ——— நாள் துரைமங்கலம் விருதுருவெட்டியிலிருக்கும் வீரசைவ ——— தாந்தாரண குமாரசுவாமி அய்யரிட புத்திரன ——— சிவப்பிர (காச) மூர்த்தி வாக்குப் பண்ணின கூவபுராணம் முற்றும். அழியாவ ——— தன் திருவடி வாழ்க சரவமூர்த்தி எழுதினது.

குறிப்பு :

ஏடுகள் புகை படிந்து காணப்படுகின்றன. தலைப்பு இல்லை. கூவம் என்பது பாடல் பெற்ற தலமாகிய திருவிற் கோலம் போலும். படலப்பகுப்பு காணப்படவில்லை.

வரிசை எண் : 3891 சுவடி எண் : 2066-b

வைத்தியநூல்

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 250 அளவு : 20×2 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம்

சிவகண மடவாய்க் கருதுரும்
யுவகிவலகையான் செயலுக் கியலும்
பச்சை மஞ்சள் சிறுதேனில்
மையாயரைத்திடாயே

முடிவு :

———கெட்டுத் திகழு நாற் சொரியுமாரிப்
பரிந்துடு நோ———
———

குறிப்பு :

இதில், பலவிதமான நோய்களுக்கு மருந்து கூறப்பட்டுளது; செய்யுள் எண்கள் தொடர்ச்சியாக உள்ளன.

வரிசை எண் : 3892 சுவடி எண் : 2067

ஞானபூசை

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 20×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : உமாபதி சிவாச்சாரியார் பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து தமிழ்.

தொடக்கம் :

சிவமயம் குருபாதந்துணை

பணித்தவரு முடன் சந்தி பண்ணினோர்கள்
பயில் நாலந்த குன்றிபகர்வன கங்குற்
புணர்த்திய சூக்கம வுடலாற் போகந்
துய்த்துப் பூதவுடற் போகத்திற் போத

முடிவு :

நமச்சிவாய தேசிகனாளு மிருங்குரவன்ளத்த
சிவப்பிரகாச தேனிலங்கு மறைவளத்தரு
கோரவனக் குகையிலுறை நாட் பொருந்தியவன்
திருவடிக் கீழ் அவனருளே வலினாற் போந்தரு
ளாவடுதுறை வாழ் நமச்சிவாயனைப் புகழ்வாம்,

குறிப்பு:

இது, தலைப்பு இல்லாததால் இன்ன நூல் என அறிதற்கில்லை. இதன் 070 –a யினால் இது ஞானபூசை என அறியலாயிற்று. இது எமது சுவடி எண் 24-i/D-696 போன்றது.

வரிசை எண் : 3893 சுவடி எண் : 2068

ஞானபூசை அட்டவணை

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 150 அளவு : 12×3 செ.மீ

பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர் : உமாபதி சிவாச்சாரியார் பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை: பழுது முழுமை :முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவமயம்

பனித்தவருமுடன் சந்தி பண்ணினோர்கள்
பயில்காலந் திருசந்தி பகர்வன் கங்குல்

புணர்த்திய சூக்கும வுடலாற் போகந் துய்த்துப்
பூதவுடல்ப் போகத்துப் போத.

முடிவு :

ஆசன மூர்த்தி மூலஞ் சாத்தி நின்மாலியங்
களித்து ஆசமனம் பண்ணிக் கர நியாசம்
அங்க நியாசம் பண்ணி ஆகமத்தைப் பூசித்து
சிவத்தியானம் பண் ணி முடிக்கவும்,
அட்டவணை முகிந்தது முற்றும்
பொன்னம்பல குருபாதமே கெதி
சுபமஸ்து.

குறிப்பு

இது, முன்பிரதிபோன்ற தெளினும் நன்றாக உளது
தலைப்பு இல்லாதால் சரிவர, பார்க்க இயலவில்லை.
இடையிடையே ஏடுகள் இய்லை. எமது சுவடி எண் 54-i/D-696 போன்றது.

வரிசை எண் : 3894 சுவடி எண் : 2069

சிவபூசை விதி

ஏடுகள்: 21 கி. எண்ணிக்கை: 400 அளவு : 20×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ
சித்தாந்தம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

ஷ்தானம் அனுஷ்டானம் முடித்து
பூசைத் தானத்தில் வந்து வட்டகை (மேல்)
அத்திரத்தாலே வெள்ளையிட்டு கலசத்தால்
கழுவி பூசைச் செமத்தை ———

முடிவு:

கரநியாச மங்க நியாசம் செய்து
அகோரத்தால் 28-ம் மூல மந்திரத்தால்
யிதா சத்தியும் செவித்து முன்பு போலே
பிராணாயாமாதிகள் செய்து விபூதி தரித்து
சிவனை உச்சரித்துக் கொண்டு தோத்திரம்
முதலானது செய்யவும். சிவமயம்
குருசகாயம். பூசாவிதி முற்றும்.

குறிப்பு:

இதில், துவாரபூசை, நிருவிக்கினம், அந்தரியாகம், தானசுத்தி, பாத்தியாசமன அர்க்கியம் திரவிய சுத்தி முதலியன உள்ளன.

வரிசை எண் : 3895

சுவடி எண் : 207

ஞான பூசை

ஏடுகள் : 6 கி எண்ணிக்கை : 100 அளவு : 18 × 3 செ. மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : உமாபதிசிவாச்சாரியார் பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

சிவமயம்
பணித்த வருமுடன் சந்திபண்ணி னோர்கள்
பயில் காலந்திருசந்தி பகர்வன் கங்குல்

முடிவு:

பொழிந்தவர் தூயபீடத்துந் தண்டிலத்து
மிறைஞ்சிப்போக்குக வறகியஞானபூசை
யிது புனிதற்கமுந்து பாகுரவதரு முச்சிட்ட

நுகர்தற்காமல்ல மாலிய மென்றறைந்தன
வாகமமே! —18 ஞானபூசைத் திருவிருத்தம்
முகுந்தது முற்றும்:

குறிப்பு :

இது, சுவடி எண் 2067,2068 போன்றது, மேலும் சுவடி எண் 54-i/696 போன்றது,

வரிசை எண் : 3896 சுவடி எண் : 2070-b

ஞான பூசை அட்டவணை

ஏடுகள் : 6 கி.எண்ணிக்கை : 100 அளவு : 18 × 3செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : உமாபதிசிவாச்சரியார் பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

சுப்பிரமணிய குரவே சிவாயநம
வென்று ஆசாரியரைத் தியானம் பண்ணிப்
பிராணாயாமம் பண்ணிச் செலத்தை
நிரீக்கணாதி சுத்தி பண்ணி

முடிவு :

தன்னாற் பிறரால் தனக்குவருந் தீங்கு நல
மின்னா விலங்கொடு புட்டெ ழெறும்பு
சென்முதல் அட்டை யலவன் முயல் நாய்
முதல் ஆனவெல்லாங் கட்டமிகு
மான்மிய மே காண்— —3.

குறிப்பு :

ஞானபூசை அட்கிவணை முடிந்தபின். 'கருவித்துயர்' என்ற தலைப்பில் 3 பாடல்கள் உள்ளன, அதன் 3-வது பாடல்மேலே உள்ள.

தமிழ்ச் சுவடி எண்:

வரிசை எண் : 3897

சுவடி எண் : 2071

ஞான உலா

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 18×3 செ.மீ பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சேரமான்பெருமாள் நாயனார் பொருள் : திருமுறை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீரார் கமலஞ் சிறந்திருக்கும் பொய்கைதனில்
நீர்வாழு மண்டூக நெஞ்சே கேள்—நேரா
யுடன்பிறந்த வாசிதனை யுள்ளத்தே காணாமல்
குடங்கவுள் நீரானதொரு கோலமே—நடம்புரிந்து

முடிவு :

பிறந்திடமே யுண்மை பேசா திருமனமே
யிறந்திடமே யெல்லை யிரு.

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:

இது, சுந்தரருடன் கைலை சென்ற சேரமான் பெருமாள் நாயனார், திருக் கைலையில் பாடிய ஞான உலாவினைப் பூவுலகில் சேர்ப்பாயாக என ஈசன் மொழிந்த படி பூவுலகம் வந்த சிறப்புடையது.

வரிசை எண் : 3898

சுவடி எண் : 2072

அனுஷ்டான முத்திரைகள் மந்திரங்கள்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 200 அளவு : 19×3 செ.மீ. பக்கத்திற்குப் : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை ; பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கண்ணுதலுஞ் செஞ்சடையுங் கறைமிடறுந் தனைக்கரந்து
கைலை நீங்கி
எண்ணரிய குருநமச்சிவாய னெனுந்திருநாம
மெங்குவோங்க
மண்ணுலகி லடியார்க ளீறும்படிசை வளர்க்க
வந்த
அண்ணா லாவடுதுறை வாழம்பல வாணன்
திருத்தா ளகத்துள் வைப்பாம்.

சிகாமுத்திரை — 3 அதிதீக்ஷண முத்திரை — 1
நமஸ்கார முத்திரை — 6 அதோமுக முத்திரை — 4
ஏகாகொட்ட முத்திரை— 2 சுவத்தீக முத்திரை — 6

முடிவு :

சதாசிவ குருவேநம அனந்த குருவே நம
சிறிகண்ட குருவேநம அம்பிகா குருவே நம
குக குருவே நம விட்டுணு குருவே நம.
அர——— ஆக———

குறிப்பு:

இதில், முத்திரைப் பெயர்களும், மூர்த்தி பெயர்களும், குருவணக்கப் பெயர் வரிசையும் உள்ளன.

வரிசை எண் : 3889 சுவடி எண்: 2073-உ

பஞ்சாட்சர கற்பம்

ஏடுகள் ; 8 கி. எண்ணிக்கை : 200 அளவு : 18×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பஞ்சாட்சரம் பரப்பிறுமம் பாவநாசம்
பவுத்திரம் பரமஞானம் பூவினதே

மனதிறாத்தம் சிவனே யென்பது
நமசிவாயம் என்கிற பஞ்சாட்சரம்

முடிவு :

யகாரஞ் சாக்கிரம் மிப்படி
பஞ்சாவத்தைகள் நின்றபடி யறிக.
முற்றும்

குறிப்பு :

இதில், ஐந்தெழுத்தின் தத்துவம் பேசப்படுகிறது.

வரிசை எண் 3900 சுவடி எண் : 2073-b

சதாசிவரூபம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 19×3 செ.மீ.
பக்கத்திற்கு: 9 வரிகள் ஆசிரியர் : சீகாழி சட்டைநாத வள்ளலார் பொருள்
சைவ சாத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து தமிழ்

தொடக்கம் :

நன்றாக வஞ்செழுத்தை நம்முத லாய
நாடியது நின்றாற் பிறப்பிறப்பு நீங்காது
வகார மதை பின்னமைத்து வாக
முத்திதரு மஞ்செழுத்தை முன்றெழுத்தாய்

முடிவு :

நிற்கிறதே அந்த நிலைமையே நிலமை யென்றறிக
சிவமயம்
ஆனந்தத்துக்கு நவ்வென்னு மச்சரமோதியே
× × × × ×
ஞானமுண்டாம். தொல்லற நடத்தினாலும் முத்தியை. —8

குறிப்பு :

இது, கண்ணுடை வள்ளலாரியற்றிய சதாசிவ ரூபத்தின் வேறாயது போலும். சைவாகமங்களுட் கூறப்பட்ட ஐந்து சாதாக்கிய லிங்கம் கூறுவது.

வரிசை எண் : 3901 சுவடி எண் ; 2061

வீரையன் அம்மானை

ஏடுகள் : 98 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 38×2½ செ.மீ

பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கதை

நிலைமை : பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கணபதியை நோக்கிக் கைதொழுவே னம்மானை
கணபதி யென்றவர்க்கு கற்மங்கள் தான்துலையும்
வினாயகனைத் தான் தொழுதால் விக்கினங்கள் தீர்ந்து விடும்
அய்யனே கண்மணியே ஆதிசிவன் புத்திரனே

முடிவு :

மீனாட்சி சன்னதியில் மீனம்பான் மாளிகையில்
தூங்கும் மஞ்சக்கத்டில் துலங்க அலங்கரித்து

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 997/D-1576 (அச்சானதின்) வேறாயது போல் காணப்படுகிறது. நடை நன்றாக உள்ளது.

வரிசை எண் : 3902 சுவடி எண் : 2075

கணக்கதிகாரம்

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 2000 அளவு : ?? × 3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : காரிநாயனார் பொருள் : கணிதம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம்

யிக்கணக்கி லொன்று யிடை கூறு வாராமல்
பொற்கண ——— பெத்தநல்ல பொதிகெழுறே
நேரே விளங்கி நிகர ——— நிக்குமாம் வண்ணைப்
பார்மெல் விளங்கவே பார்.

முடிவு :

மூன்றாஞ் சங்கையும் அன்பத்தாறு
சதடை நூத்திருபத்தாறு
கணக்கதிகாரம் முற்றும்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 6(8) D–124 போன்றது. பிழைகள் மலிவு. முன்ன ஒரு தனி ஏடு கணிதம் உளது 49-வது ஏட்டில் முடிகிறது 50-வது ஏட்டின் பின்புறம் தாளி வினாட நாடித் துணித்து நாள்ச் செ ——— என்றும் முடிகிறது. 49-வது கடைசி ஏடு ஒடிந்துளது.

வரிசை எண் : 3903 சுவடி எண் : 2076

சூளாமணி நிகண்டு

ஏடுகள் ; 94+49=143 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 28½×3 செ.மீ

பக்கத்திற்கு : 7–9 வரிகள் ஆசிரியர் : வீரமண்டல புருடன் பொருள் : நிகண்டு

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவமயம்

பொன்னு நன்மணியு முத்தும்
பொலிந்தமுக் குடைநி ழற்ற
மின்னுபூம் பிண்டி நீழல்
வீற்றுருந் தவளை வாழ்த்தி
மன்னிய நிகண்டு சூளா
மணியென வொன்று சொல்வே
னின்னிலந் நன்னில் மிக்கோ
ரியாவரு மிருந்து கேண் மின் —1.

முடிவு :

அன்வினையொடு பெயர்க்கு மிகுதி சாரியையும் நாற்பேர்
மன்னிடுங் கனைத்த லென்ப திருளோசை யிருபேர் வைக்கு
மின்னன வொரு சொற்பல பெயர்க்கியற்கவி முன்னூற் றொன்பான்
சொன்னவன் குணபத்திரன்றாள் சூடு மண்டலவன்றானே! —309

ஆக எதுகை 18-க்குக் கவி 309-ம் எழுதி முடிந்தது

சிவமயம்

இதன் விளக்கங்களை எமது சுவடி எண் 489;D-24-ல் காண்க இதில் 11 தொகுதிகளும் முழுமையாக உள்ளன. எழுத்துக்கள் அழகாக உள்ளன. சுவடியின் தொடக்கத்தில் நிகண்டு பதினோராவது தெய்வப்பெயர்த் தொகுதி என்றெழுதிய ஏடொன்றுளது.

வரிசை எண் : 3004 சுவடி எண் : 2077

கொக்கோகம்

ஏடுகள் : 73 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 28×3 செ.மீ.

பக்கத்திற்கு: 7 வரிகள் ஆசிரியர் : கொக்கோகர் பொருள் : காமநூல்

நிலைமை: நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக முதலத்தியாயம் வரலாறு
கன்னலன்றி வேம்பைநுகர் காமத் துரோகிகள் போற்
பின்னை மற்றோர் தெண்ட ——— செனே யென்னாஞ்
சாற்றுவதுங் காமகலை சாதிப்பதுங் காரணம்
போத்துவநூங் காமனடிப் போது.

முடிவு :

இப்படிக் குறிவைக்கிற தானங்களிற் பற்குறியும்
வைக்க.இதற்கு வேளை யூடல் தீர்ந்த காலம்
போக போகமா யனுபவிக்கிற காலம்
போக நீட்டித்து கால ——— ———

குறிப்பு:

இது, காமம் நுகர்கின்ற ஆண் பெண் இலக்கங்களையும் கூடல், ஊடல் நகக் குறி முதலானவைகளை விரிவாவகக் கூறுவது, அச்சாகியுளது. ஆண்களின் வகைகள், பெண்களின் வகைகள் உள்ளன.

வரிசை எண் : 3905 சுவடி எண்: 2078

ஞான மதியுள்ளான்

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை : 800 அளவு : 25½×2½செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவமயம் : ஹரி ஓம் நன்றாக
அரிவிந்து னாத முத்தி ஆனந்தி பதத்தைப் போற்றி
பரிமுந்து பத்தர் சித்தர் பண்புள்ளே × × ×
× × × × × × ×

வன்மையா யுலகை யாண்டு வாழ்ந்துதான் கெந்தி மன்னன்

× × × ×

தன்மையாயி வல்லியாலே தான்மதிகெட்டுவ்ளானேன்! —4

முடிவு :

மந்திரம் யெனக்குச் சொல்லியே ஆளகுரு வல்லியரே
ஆந்திர வெளியூடையரனந்திரிந்தலை யாமலுனடி காட்டி
மந்திரம் கலையோகம் ———

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 948/D-1224 போன்றது.

வரிசை எண் : 3906 சுவடி எண் : 2079

மந்திரங்கள்

ஏடுகள் : 48 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 27 x 3செ.மீ
பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : மந்திரங்கள் நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

(சக்கரம் உளது)
தீபமொடு தூபம் கந்தனொடு பஞ்சதிசை
மந்திரந் தன்னாலே கனகலும்
ஆயிரத்தெட்டாகும் பின்னவந்தபடி
நூத்தெட்டாகும்

முடிவு :

சிவாய முகளுக் குடைய வளணை
பூளாக்கே ஓடிவா - செம்பு களுகவ்

வாங்க கற்பூரவன்ளளியிலைச் சாற்றில்
ஏழுதிரம் உருக்கிச் சட்டியில் ஏழுதிரம்
களிம்பு வாங்கும்.

குறிப்பு :

இதில். மருத்துவம் மிகுதியாகக் காணப்படுகிறது. மந்திரங்களும் சக்கரங்களும் உள்ளன.

வரிசை எண் : 3907 சுவடி எண் : 2080

நாடி சோதிடம்

ஏடுகள்: 28 கி. எண்ணிக்கை : 600 அளவு : 23 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

———— யாகச் சகலமுமரியலாம். ஆன————
பினாலே பாரென்றவாறு — 1.
சொல்லாரும் நெடுங் கயத்தில்
வருணமான சூத்திரத்தினாற் துவக்கி
யாசிராமமென்னு நல்லார் மூக்கணாங்கயறு

முடிவு:

காரிருள் ……… யாது பிறை கைகால்
நின்றில் அகங்குறையில் முப்பிரை
யிலக்காட———— காலே! எ.து

குறிப்பு :

முதலேடு இல்லை. அதனால் தலைப்பு தெரியவில்லை. இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3908 சுவடி எண்: 2081-a

வேலவர் சஷ்ட்டி கவசம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : பாலன் தேவராயன் பொருள் : சைவ தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

ஹரி: ஓம்
கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
× × × × ×
கணபதி யென்றிடக் கரும மில்லையே ! சிவமயம்
வேலவர் சஷ்ட்டிக் கவசம் விரும்பித் துதித்தோர்க்கு
× × × × ×
ஓம் சஷ்ட்டியை நோக்க சறவண பவனார்
பெருகு மிளையோ நிருபதத்தை வல்லாண்மை யுண்றென்றுவார்.
சிவமயம்
சிஷ்ட்டருக் குதவிய செங்கதிர் வேலோன்

முடிவு :

உயர்கிரி கனக சபைக்கொ ராசே

குறிப்பு :

அச்சான 'கந்தர் சஷ்டி கவசம்' இது, எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

வரிசை எண் : 3909 சுவடி எண் : 2081-b

ஆறுமுகப் படை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 70 அளவு : 28×4 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ தோத்திரம் நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆறுமுகவன் தினவன்
அறுபலப் பிணிநோய்
வறுமைக ளாக வடற
வாழ்வுகள் மிகுமாப்

முடிவு :

சுத்தர மாருதத்தைச்
சுரும்பினா லசைக்கொ ளாது
கந்தனைப் போற்றுவார் மேல்
காலனு மணுக ளாதே !
(சரவணபவ எனும் ஆறானாச்சக்கங்கள் 2 உள்ளன)

குறிப்பு :

கந்தனிடம் நல்வாழ்வு வேண்டுவது.

வரிசை எண் : 3910 சுவடி எண் : 2081-ட

சகலமான வியாதிக்கு

ஏடுகள் : 4½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

குருபர செவ்வேள்
கொடும்பிணி நோய்க்கும்
பரிகா ரியனாய் பசு வெண்ணீத்தால
தலைவலி குன்ம மதரித்திரிய
நோய்போம் சூலை வலிக் கொருநோய்
குஷ்ட்ட வியாதி போம்.

முடிவு :

அணிந்தவர்க்கு வேண்டுவரந்தரு நீறு
முதல்வனே பழனி மலை முருகனுடை திருநீறு
சிவமயம்
ஆறுமுகந் துணை
குருகடாட்சம்

குறிப்பு :

பழனியப்பபனுடைய திருநீறு சகல பிணிகளையும் போக்கும் என்பதா கூறுவது.

வரிசை எண் : 3911 சுவடி எண் : 2081-d

ஆறு முரு காற்றுப் படை

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 28 × 4 செ.மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம்

வருபிணியை நீக்கு மனமிடியைப் போக்குங்
குருவருளான குமரர் பெருமுனையில்
லட்டஞ் சுற்றக் கடலை வற்றிச் சகரைக்கிரியை
விட்டு பட்டுப் பறியும் வேலன்

முடிவு :

யிப்பதிதனி லிரட்சித்தெம்மையுங்
காற்க வருள் நீர் காற்பதுன் கடனே !
ஆறு முகாற்றுப்படை
முற்றும்

குறிப்பு :

இது, திருமுருகாற்றுப்படைபோன்றது. இதனைப் போல், வருமுருகாற்றுப் படை, இயல்முருகாற்றுப் படை முதலியன உள்ளன. அந்த வகையில் இதுவும் ஒன்று

வரிசை எண் : 3912 சுவடி எண் : 2082-இ

கரு முரு காற்றுப் படை

ஏடுகள் : $2\frac{1}{2}$ கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப் படை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

(சண்முகமந்திர ஆறாரைச் சக்கரமுளது)
அறுமுகவா வென்று அடியே நினைத்திட
அன்புடனே
சிறுமுருக மாமயிலேறிய வள்ள தெய்வானையுடன்
குருமுகமாய் வந்து வினைகுறை தீர்க்குங் குமரய்யனே

முடிவு :

பெருமையை அல்கு சோதியோ டார்ந்த மாகித் திலத
மயிலினில்த் தீயென்றிறீரே.
திருச்செங் கோட்டுறைச் செல்வநென் சிந்தையே!
தனிமுருகபற்றுப்படை முற்றும்
சிவமயம்.
திருச்சற்றம்பலம்
தேவிசகாயம்

ஸ்ரீராமசெயம் ஆறுமுகந் துணையாகவும்
வள்ளியம்மன் துணையாகவும்

குறிப்பு :

தலைப்பு ஒன்றாகவும் முடிவு வேறாகவும் உளது.

வரிசை எண் : 3913 சுவடி எண் : 2081-f

அணி முருகாற்றுப் படை

ஏடுகள் : $1\frac{1}{2}$ கி.எண்ணிக்கை : 100 அளவு : 28×4செ.மீ: பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஓம் பரங்குன்றில் பன்னிருகைக் கோயான் பொற்பாதங்
கரங்கூப்பிக் கண்களி கூறக் கண்டு

முடிவு :

சுடரே போற்றி போற்றி போற்றியென் றுன்னை
சாற்றுவே னிருதாள் தந்தரு ளெமக்கே !
சிவமயம்
ஆறுமுகந் துணை.
அணிமுருகாற்றுப் படை முற்றும்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1282-h/D-1578 போன்ற தெனினும் முடிவு வேறு பாடாக உளது.

வரிசை எண் 3914 சுவடி எண் : 2081-g

வருமுருகாற்றுப் படை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: ஆற்றுப்படை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

கருமுருகா ருங்குழல் வள்ளிக் கேள்வன்
கருதலரைப் பொருகா தவான்று பதிபண்ணை.

முடிவு :

திரிக்கரவே வேல்வாங்குஞ் சண்முகனே
சற்றே பகரப் போமே பகை.
வருமுககாற்றுப் படை முற்றும்

குறிப்பு :

இது எமது சுவடி எண் 1282-i/1583 போன்றது, எனினும் பாடவேறு பாடுகள் உள்ளன.

வரிசை எண் : 3915 சுவடி எண் :2081-h

பொரு முருகாற்றுப் படை

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 100 அளவு: 28×4 செ. மீ.:
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் ஆற்றுப்படை நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

மனமே நினைந்திடாய் வல்வினை நோய் மாற்றும்
கனமேவு செல்வந் தழைக்குஞ்-சினமேவும்
பொங்கரவன் கங்கணவன் புங்கரவன் கங்கைமகன்
சிங்கபுரனார் செங்கமலத் தாள்.

முடிவு:

கூத்தன் தந்தருள் கோமளக் குன்றே
வாக்கு மனமுந் திருவு மளியர்க்குங்
குமரா வுன தருளலா திலையே !
பெருமுருகாற்றுப் படைமுற்றும்
ஆறுமுகந் துணை.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1582-அ D.1582-ன் வேறாயது. தொடக்கம் பொருமுருகாற்றுப் படை என்றும், முடிவு பெரு முருகாற்றுப்படை என்றுமுளது

வரிசை எண் : 3916 சுவடி எண் : 2081-i

திருமுருகாற்றுப் படை

ஏடுகள் : $1\frac{1}{2}$ கி. எண்ணிக்கை : 10 அளவு : 28×4 செ.மீ. பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை நிலைமை : நல்ல நிலை முழுமை ; முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஒருமுருகா வென்றென் னுளங்குளிரவும் வந்துடனே
வருமுருகா வென்று வாய்வெருவா நிற்ப கையிங்கனே

தருமுருகா வென்று தான் புலம்பா நிற்பத் தய்யல் முன்னே
திருமுருகாற்றுப் படையுடனே வருவாய் சேவுகனே!

முடிவு:

பண்ணிய குறத்தி வடஉள்ளாயகியும் பச்சைமயிலும்
பரிந்தென்னிறு தையத் திச்சைப்படிக்கு வினிதிருந்தருளே!
திருமுருகாற்றுப்படை முற்றும்
ஆறுமுகந்துணையாவும்.
குருகடாட்சம்

குறிப்பு :
இது, நக்கீரர் திருமுருகாற்றுப் படையின் வேறாயது.

வரிசை எண் : 3917 சுவடி எண் : 2081-i

அகத்தியர் பத்தாங் காண்டம்

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×4 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர்: அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கேளப்பா வாளி யென்ற காத்தைச் சொல்வேன்
கெடியான சியாமளா தேவி யாலே
னாளப்பா மைபோலோ கருத்து நிற்கும்
கண்ணுக்குத் தோத்தாது கடின மெத்த.

சோதியுடன் வந்ததொரு யூளி யுந்தான்

சொல்லு முன்னே போகுமடா துன்ப நீங்கு

வியாதியுடன் மூதண்டங் கொண்டு வந்தால்

என்மகனே வூளியது ஒதுங்கிப் போகும்.

சாமளா தேவி துணை.

குறிப்பு :

இது, மருத்துவத்தைச் சார்ந்தது.

வரிசை எண் : 3918 சுவடி எண் : 2082

மந்திரத் திரட்டு

ஏடுகள் : 33 (1–8,14,15 ஆகிய ஏடுகள் இல்லை) கி. எண்ணிக்கை: 300
அளவு : $15\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ மீ பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரங்கள் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்

தொடக்கம :

மாரண மாரணம்

வாலை புவனை திருபுரை மூன்றையு

மிவ்வயகத்தில்க்

காலையு மாலையும் உச்சியுமாக

யெக்காலையுமே

ஆலையமாக வராகிதன் பாதத்தை

அன்பி லுன்னி

மாலையன் தேவர் முதலான தேவரும்

வாழ்த்துவரே! —9.

முடிவு :

உள்ளங்கால் பூமாதேவி கட்டு
என்கட்டு ஈசுபரனுடைய கட்டு
வன்கட்டாக நிற்கச் சிவா.
குருமுன்னிற்க

குறிப்பு :

சுவடி 9 ஆம் ஏட்டிலிருந்து தொடங்குகிறது, இதில் வித்துரு மாரணம், அக்கினி மாரணம், சிவமாரணம், சத்துரு மாரணம், விருட்ச மாரணம், சேனை படை மாரணம், எதிரி மாரணம், ஏவல் சத்துரு மாரணம், சருவ சத்துரு மாரணம், திசைக் கட்டு மாரணம், பதில்லா மாரணம், ராட்சதை மாரணம்; முதலான மாரண மந்திரங்கள் (சிலவற்றிற்கு) சக்கரங்களுடன் உள்ளன.

வரிசை எண் : 3919 சுவடி எண் ; 2083-a

சகலகலா வல்லி மாலை

ஏடுகள்: 4 கி. எண்ணிக்கை: 80 அளவு : $15\frac{1}{2} \times 2$ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள் : சைவ தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்க
வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
ஜகமேழு மளிந்
துண்டா னுரங்க ஒழித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகலகலா வல்லியே ! —1

முடிவு :

விண்கண்ட தெய்வம் பலகோடி யுண்டேனும்
விளம்பி லுன்போல்
கண்கண்ட செய்வ முளதோ
சகலகலா வல்லியே ! —10
சரசுவதி தோத்திர
முற்றிற்று

குறிப்பு

முதலே ஒடிந்து பிறழ்ந்துளது, அச்சாகியுள்து.

வரிசை எண் : 3920 சுவடி எண்: 2083-b

சரசுவதி யந்தாதி

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 200 அளவு : 15½ × 2 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : கம்பர் பொருள் : வைசவத்தோத்திரம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

வாணிதுணை
நேரிசை வெண்பா
ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கு மென்மனமை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்

முடிவு :

பெருந்திருவுஞ் சயமங்னகயு மாகியென் பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப் போற்றியெல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந்தருமின்பவேதப் பொருளுந்தரும்
திருந்திய செல்வந் தருமளியாப் பெருஞ்சீர் தருமே ! —30

சரஸ்வதி யந்தாதி முற்றிற்று

குறிப்பு :

இது, அச்சாகியுளது 8-வது ஏடு ஒடிந்துளது.

வரிசை எண் : 3921 சுவடி எண் : 2084-a

வைத்தியம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 28 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் வைத்தியம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
ஒருரை யுரைக்கு மாகில்
ஊருடன் கலாபம் சொல்லும்
யிருரை உரைக்குமாகில்
யிருகையில் பொருளுஞ் சேரும்

முடிவு :

கொள்ளட்டாது சுள்ளிபோல
ஊறுமடா நேறேக மெல்லாம்

சுறுக்கென்று நீர்க்கடுப்பு
தோன்றுந்தானே!

முடிவு :

